# '93 இல்

# கலை இலக்கிய ஆய்வு



To Thambimuthu Amara Srishan
With Affection T. Ajithram Premeel
7 Feb 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '93 இல் கலை இலக்கிய ஆய்வு

(15 - 08 - 1993 அன்று திருக்கோணமலையில் நடைபெற்ற ''பிரதேச தமிழ் சாகித்திய விழாவில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு)

: தொகுப்பு :

கலாவிநோதன் த. சித்தி அமரசிங்கம்

- வெளியீடு -

ஈழத்து இலக்கியச் சோலை

திருக்கோணமலை

1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு : 05

நூலின் பெயர் : 93இல் கலை இலக்கிய ஆய்வு
(கட்டுரைத் தொகுப்பு)

தொகுப்பாசிரியர் : த. சித்தி அமரசிங்கம்

முதற்பதிப்பு : ஆவணி 1996

பக்கங்கள் : VIX 77

பிரதிகள் : 1000

வெளியிடுவோர் : ஈழத்து இலக்கியச் சோலை
21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.

அச்சகம் : ஸ்ரீ கணேச அச்சகம்
28B, புதிய சோனகத் தெரு,
திருக்கோணமலை.

முன் அட்டை : சுய சித்திரப்பிரதிமை - பிரேமிள்

பின் அட்டை : பெனடிக்ற் (பென்)

விலை : ரூபா 65/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே............


1. சமர்ப்பணம்

2. ஆசிச் செய்தி: மாண்புமிகு P. P. தேவராஜ் அவர்கள்
(கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)

3. ஆசிச் செய்தி: சட்டத்தரணி திரு. மு. கோ. செல்வராசா
(தலைவர் திருக்கோணேஸ்வர பரிபாலன சபை)

4. வாழ்த்துரை: திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்
வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளை யாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர்

3. வெளியீட்டாளர் உரை: ந. சித்தி அமரசிங்கம்

6. ஆய்வுக் கட்டுரைகள்:

அ. திருக்கோணமலையில் நாவல் இலக்கிய வளர்ச்சி
- தமிழ்மணி ந. பாலேஸ்வரி -

ஆ. திருக்கோணமலை மாவட்டத்தில் சிறுகதை வளர்ச்சி - திருமதி. சித்தி பத்மநாதன் -

இ. திருக்கோணமலை பிரதேசத்தின் கவிதை வளர்ச்சியும் கவிஞர்களின் பங்களிப்பும்
- கெஜ. சித்திரவேலாயுதம் -

ஈ. திருக்கோணமலை மாவட்ட நாட்டாரிலக்கியம்
- ஏ. எஸ். உபதுல்லா -

உ. திருக்கோணமலைப் பிரதேச நாடக ஆய்வு
- தா. பி. சுப்பிரமணியம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத் தந்தை

அண்ணாவியார்

# வ. தம்பிமுத்து

அவர்களுக்கு

# சமர்ப்பணம்



தோற்றம்:- 24 - 05 - 1900

மறைவு:- 28 - 11 - 1960

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சின்
முன்னாள் இராஜாங்க அமைச்சரும், கொழும்பு
மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான
திரு. பி. பி. தேவராஜ் அவர்களின்

# ஆசிச் செய்தி

இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்ட பொழுது நாடு மிக மோசமான சூழ்நிலையிலிருந்தது, வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் போராட்டங்கள் தலைதூக்கியிருந்த காலம் அது. கொழும்பில் அரசாங்க அலுவல்களெல்லாம் ஜனதா விமுக்தி பெரமுனவின் பயமுறுத்தல் காரணமாகச் செயல்படாதிருந்த காலம்.

நீண்டகாலம் தமிழ் அமைப்புக்கள் இலக்கிய, இசை, நாடக நிகழ்ச்சிகளை நடத்த முடியாதிருந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சரின் பொறுப்பை ஏற்றேன். எவ்வளவு தான் சங்கடங்களும், சிரமங்களும் தோன்றினாலும் அவற்றையெல்லாம் சமாளித்து எடுத்த பொறுப்பைச் செவ்வனே முடிக்க வேண்டுமென்ற சிந்தனையுடன் செயல்பட்டேன்.

இந்துசமய, கலாசாரத்திற்கென ஓர் அமைச்சைத் தாபித்தபொழுது, மாண்புமிகு செ. இராஜதுரை, இந்துசமய, கலாசார, தமிழ்மொழி அமுலாக்கல், பிரதேச அமைச்சராகப் பதவியேற்றார். அப்பொழுதுதான் முதன்முதலாக இந்து சமயத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிக்காக்கும் பணியிலும், தமிழை வளர்க்கும் கடப்பாட்டிலும் அரசு நேரடியாகப் பங்கு கொள்ள இடமேற்பட்டது. அவர் காலத்தில் உலக இந்து மாநாடு நடைபெற்றது. விபுலானந்த இசைக்கல்லூரி தாபிக்கப்பட்டது. இந்துசமயத்துடன் தொடர்புள்ள பல அரிய நூல்கள் வெளியிடப்பட்டன. தமிழ் வளர்த்த யாழ்ப்பாணத்தையும், மட்டக்களப்பையும், திருக்கோணமலையையும் நினைவுறுத்தும் வகையில் மேலும் சில நூல்களை வெளியிட்டார். இந்துசமய கலைக்களஞ்சிய வெளியீட்டுக்கு அடிகோலினார்.

இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு, இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீடு மிகக் குறைவாயிருந்த போதிலும், அவர் விட்ட பணியைத் தொடர்ந்து மேற்கொண்டேன். புதிய பரிமாணத்துடன் தமிழ் வளர்ச்சிப்பணியில் இறங்கினோம். இதுவரை தமிழ் நிகழ்ச்சிகளென்றால் யாழ்ப்பாணமும், தலைநகரான கொழும்பும், பின்னர் மட்டக்களப்பும் என்ற சிந்தனையையும், நிலைப்பாட்டையும் மாற்றி, தமிழ் நிகழ்ச்சிகளை திருக்கோணமலை, கண்டி, நுவரெலியா, பதுளை, கல்முனை, அம்பாறை, பண்டாரவளை, மாத்தளை போன்ற தமிழ்பேசும் மக்கள் வாழும் பல இடங்களிலும் நடத்த முடிவு செய்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து வருடங்களாகத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் விருது வழங்கப்படாமலிருந்ததை அவதானித்து, முதலாவது தமிழ்சாகித்திய விழாவிலே அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தோம்.

இவ்விதமாக நாம் மேற்கொண்ட தமிழ் நிகழ்ச்சிகளில் ஒன்று திருக்கோணமலையிலும் நிகழ்ந்தது. அந்தக் கருத்தரங்கிலே பல கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. திருக்கோணமலை இலக்கிய வரலாற்றைத் தொட்டுக் காட்டும் அக்கட்டுரைகளை திருகோணமலை எழுத்தாளர்கள் நூலுருவில் தந்திருக்கிறார்கள்.

தமிழ் வளர்ந்த வரலாற்றை, இவ்விதமான கட்டுரைகள் நூல்வடிவில் வருவதனால் அறிந்துகொள்ள வாய்ப்பேற்படுகின்றது. அரசு முன்வந்து அதிகார பலம் படைத்த தமிழர்கள், முஸ்லிம்களிடம் சமய வளர்ச்சிப் பொறுப்புக்களைக் கையளிக்கும்பொழுது அவற்றின் முன்னேற்றம் பளிச்செனத் தெரிகின்றது.

திருக்கோணமலைக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளை '93 இல் கலை, இலக்கிய ஆய்வு' என்ற தலைப்பிலே நூலுருவில் தந்ததனால் சீரிய பணியை அவர்கள் ஆற்றியிருக்கிறார்கள். அவர்களின் பணி மேலும் சிறக்க உளமார வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்துறையுடன் திருக்கோணமலைக்கு இணக்கமான உறவு உண்டு

மு. கோ. செல்வராசா

தலைவர்

திருக்கோணேசர் ஆலயம்

திருக்கோணமலைக்கும், சிறுகதை, நாடகம் ஆகிய துறைகளுக்கும் மிக இணக்கமான ஓர் உறவு நீண்ட காலமாக இருந்துள்ளது என்பதை தமிழ் உலகம் நன்கு அறியும். சிறுகதை இலக்கியம் திருக்கோணமலை சூழலில் உள்ள மண் மணத்துடன் பல வெளிவந்த போதும் அதன் ஆக்கத்தை ஆர்வத்துடன் ஆதரிக்கும் பெரு மனது படைத்த பெருமக்கள் ஒரு சிலரே, ஆக்கத்திற்கு ஊக்கம் தந்தனர். நமது அல்லாத வெவ்வேறு கதைகளையும், கதைகள் ஆக்கியவர்களையும், கூறி பெருமைப் படுவது தமக்கு பெருமை சேர்க்கும் என நினைக்கும் சிலர் இருக்கவே செய்கின்றார்கள்.

இவர்கள் இலக்கிய சுவைஞர்கள் என தம்மை அழைத்துக் கொள்வார்கள். உண்மையில் நடு நிலை நின்று நாடகங்களையோ, சிறு கதைகளையோ, ஆய்வு செய்து நல்ல இலக்கியங்களுக்கு பெருமை சேர்க்க வேண்டிய கடமையில் இருந்து விலகி விடுகின்றார்கள், இது வேதனைக்குரிய விடயமே இவ் வேளையில் திருக்கோணமலை கலை இலக்கிய நண்பர்கள் நமது திருக்கோணமலையில் இருந்து வந்துள்ள நாடக, சிறுகதை ஆகியனவற்றின் மீதான ஆய்வினை செய்ய முயன்றுள்ள முயற்சிதனை பெருமனதுடன் பாராட்டுகின்றேன்.

இவர்களது பயணம் வெற்றி பெறுவதற்கு சிவ பூமியின் பெருமான் கோணநாதரின் திருவடியை நினைத்து அவர் அருளினை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார
விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர்
திரு. எஸ், எதிர்மன்னசிங்கம் அவர்களின்

# வாழ்த்துரை

இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டின் பேரில் திருக்கோணமலையில் 1993ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவின் கலை நிகழ்வின் போது படிக்கப்பட்ட திருக்கோண மலைப் பிரதேச வழக்காறுகள் சம்பந்தமான சகல கட்டுரைகளையும் தொகுத்து நூல்வடிவில் கொண்டுவரு வதற்கு 'ஈழத்து இலக்கியச் சோலை' என்னும் அமைப்பு எடுத்துள்ள முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

திருக்கோணமலைப் பிரதேச நாடக வளர்ச்சி, நாடகக்கலைஞர்களின் பங்களிப்பு, மேடையேற்றப்பட்ட நாடகங்கள், கையாளப் பட்ட உத்திகள் ஆகிய சகல விடயங்களையும் கொண்டு அமையப் பெற்ற கட்டு ரையொன்றினை நாடக ஆசிரியர் திரு. தா. பி. சுப்பிர மணியம் அவர்கள் இந்நூலில் எழுதியுள்ளார். அடுத்து: திருக்கோணமலை நாவல் இலக்கிய வளர்ச்சிபற்றி பிர பல பெண் எழுத்தாளரும், நாவல் ஆசிரியையுமான தமிழ்மணி பாலேஸ்வரி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை இடம் பெறுகிறது. இக்கட்டுரையிலே இதுவரை காலமும் திருக்கோணமலை மண்ணிலே எழுந்த நாவல் இலக்கியங்கள், அவற்றினது சிறப்புக்கள், நாவல் இலக்கியத் துறையில் அவை ஏற்படுத்திய தாக்கங்கள் என்பன இடம் பெற்றுள்ளன.

கவிதை வளர்ச்சியினைப் பற்றிய சிறந்தவொரு ஆய்வு முயற்சியினைக் கவிஞர் திரு. சித்திரவேலாயுதம் அவர்கள் மேற்கொண்டு பல தகவல்களையும் உள்ள டக்கியதாக, உதாரணக் கவிதைகளையும் குறிப்பிட்டு எழுதிய கவிதை இலக்கியம் பற்றிய ஆய்வுக்கட்டுரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் இடம் பெற்றுள்ளது சிறப்பானதாகும்

அடுத்து நாட்டார் இலக்கியம் சம்பந்தமாக மூதூர் பிரதேசத்தினைச் சேர்ந்த எழுத்தாளர் ஜனாப். ஏ. எஸ் உபைதுல்லா அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு கட்டுரையொன்றினை எழுதியுள்ளார். அக்கட்டுரை இந்நூலில் இடம் பெறுவது பண்பாட்டுக் கோலங்களை எவ்வாறு நாட்டுப் பாடல்கள் படம் பிடித்துக் காட்டு கின்றன என்பதினை உணர்ந்து கொள்ள வழி செய் கின்றன. கிராமத்திற்கு கிராமம் நாட்டுப் பாடல்கள் வழங்கி வந்துள்ளன. அத்தோடு முஸ்லீம் மக்களால் பாடப்படும் கவிகளும் இதனுள் அடங்கும். நாட்டார் இலக்கியம் சமூக பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன.

அடுத்து திருக்கோணமலை மாவட்டத்தில் 'சிறுகதை' இலக்கியத்தின் வளர்ச்சி பற்றியும், இது வரைகாலமும் சிறுகதை எழுத்தாளர்களாக விருந்தோர் விபரங்களும், இயற்றப்பட்ட சிறு கதைகள் யாவை என்ற தகவல்களும், சிறுகதை இலக்கிய வளர்ச்சியில் இம் மாவட்ட எழுத்தாளர்களின் பங்களிப்பு எத்துணை யானது என்பன போன்ற விபரங்களையும் திருமதி சித்தி பத்மநாதன் அவர்கள் மிகச் சுருக்கமாகவும், சிறப் பாகவும் எடுத்துக் காட்டியுள்ளார். ஆய்வுகளை மேற் கொள்ளும் இலக்கிய வரலாற்று மாணவர்களுக்கு இந் நூல் பெரிய உதவியாக அமையும் என்பதே எனது கருத் தாகும். இவ்வாறன நல்லதொரு முயற்ச்சியில் 'ஈழத்து இலக்கியச்சோலை' அமைப்பினர் ஈடுபட்டு செயலாற்றி யமையைப் பாராட்டுவதோடு மிகுந்த நன்றி யையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டாளர் உரை

''93ல் கலை இலக்கிய ஆய்வு''

இது எமது ஐந்தாவது வெளியீடு

திருக்கோணமலை கலை இலக்கியப் படைப்புக் களை வெளிக்கொணர வேண்டும் என்பதும், திருக்கோண மலை கலை இலக்கியங்களையும், அவை பற்றிய தக வல்களையும், வரலாறுகளையும் ஆவணப்படுத்த வேண் டும் என்பதும் எமது இலட்சியங்களுள் ஒன்றாகும்.

திருக்கோணமலை கலை இலக்கிய தகவல்கள் சரி யான முறையில் பாதுகாக்கப் படாததன் காரணமாக இம் மண்ணின் கலை இலக்கிய வரலாறுகள் எடுப்பார் கைப்பிள்ளை போலாகிவிட்டது. அவரவர், தங்கள் தங் கள் போக்கிற்கு எழுதுவதுமட்டுமின்றி, சிலர் தகவல் களைத் தேடி எடுக்க முயற்சிக்காமலும், சோம்பல் நிமித் தமாகவும் தங்கள் வெளியீடுகளில் திருக்கோணமலை கலை இலக்கிய தகவல்களை கூற மறந்துவிடுகின்றார்கள்.

இவ்வித அசமந்த போக்கால் வெளி உலகிற்குத் திருக்கோணமலையின் கலை இலக்கிய வளர்ச்சி பற்றிய உண்மை நிலை அறிய முடியாமல் போய்விடுகின்றது. திருக்கோணமலை கலை இலக்கியப் படைப்புகள் இருக் கின்றதா, படைப்பாளிகள் இருக்கின்றார்களா என்ற கேள்வி எழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால், திருக்கோண மலையைத் தங்கள் கலை இலக்கிய வளர்ச்சிக்குக் கள மாகக் கொண்டவர்கள்கூட தங்கள் ஆய்வுகளில் திருக் கோணமலை கலை இலக்கிய நாடகத்தைப் பற்றிக் கூற ஏனோ மறந்து விடுகின்றார்கள். இது திருக்கோணமலை கலை இலக்கிய உள்ளங்களைப் பெரிதும் பாதித்துள் ளது. இந்நிலை மாறவேண்டும். அதற்கு நாமும் செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட வேண்டும். எனவேதான் இக்கட்டுரைத் தொகுதியை ஆவணப்படுத்த வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டோம். இனியும் செயல்படுவோம்.

இந்தத் தொகுதி ஒரு பூரணமான தொகுதி என்று நான் சொல்லமாட்டேன். இதில் எத்தனையோ செய்திகள் - தகவல்கள் விடுபட்டும் இருக்கலாம். ஆனால் இது ஒரு அவசரப் படையல்.

திருக்கோணமலைப் பிரதேச தமிழ் சாகித்திய விழாவை நடாத்த இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முயற்சி எடுத்தபோது, இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள், திருக்கோணமலையில் நடக்க இருக்கும் இவ்விழாவில், திருக்கோணமலை கலை இலக்கிய படைப்பாளிகளை - பங்காளிகளைக் கொண்டே ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருந்தார். இவ் விழாவினை நடத்த எண்ணிய அந்த மேல் அதிகாரியின் எண்ணம், வெறும் சாகித்திய விழாவை எடுத்து தன்னை உயர்த்திக் கொள்வதாகவோ, அன்றித் தான் ஒரு செயல் வீரன் என்று பறைசாற்றுவதாகவோ அல்ல. ஒரு பிரதேசத்தில் விழா எடுக்கப்படும்போது, அந்த மண்ணில் அதன் கலை இலக்கிய வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்ட கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதே! அந்தந்த மாவட்டத்தின் கலை இலக்கிய உணர்வுகளை அந்தந்த மண்ணின் மைந்தர்களால்தான உணரமுடியும் என்ற உண்மையை உணர்ந்தார். அவர் வெறும் பட்டத்திற்கோ, பதவிக்கோ முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எனவே இவரின் தனித்துவ ஆற்றல் மிகுந்த ஆளுமையின் காரணமாக, அவரது கட்டளையை அவசர அவசரமாக செயல்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த அவசர அவலத்துக்குள் தள்ளப்பட்ட எமது ஆய்வாளர்கள் குறுகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்குள் தங்களால் இயன்ற அளவு தகவல்களை முடிந்த மட்டும் திரட்டி எடுத்துத் தந்துள்ளார்கள்.

ஆய்வு என்பது அவசரப்படையல் அல்ல அது எறும்பூரக் கற்குழியும் என்பது போல், தேட வேண்டும், தேடவேண்டும், தேடிக்கொண்டே இருக்க வேண்டும்.

இந்த இடத்தில் என் அனுபவம் ஒன்றைக் கூற ஆசைப்படுகின்றேன்.

1978 காலப்பகுதியில் ஒரு நாள், கணேசன் சந்தியில் கடை வைத்துத் தொழில் நடத்திக்கொண்டிருந்த அந்தோனிப்பிள்ளை அவர்களிடமிருந்து ஒரு நாடக நூலைப் பெற்றுக் கொண்டேன். அது திருக்கோணமலை வேலாயுதம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டு 1925-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ''இஸபெல்லா'' என்ற நாடகம். அதைக் கண்டதும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. யார் இந்த வேலாயுதம்பிள்ளை? என்று அறிய முனைந்தேன். தேடினேன், அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தகவல் கிடைத்தது, முழுமையாகக் கிடைக்கவில்லை. இருந்தும் என் தேடுதல் நிற்கவில்லை. தேடினேன் வருவோர் போவோரிடமெல்லாம் - சந்தித்தவர்களிடமெல்லாம் விசாரித்தேன்...... பயனில்லை.

காந்தி மாஸ்டரின் சேவையைப் பாராட்டியும், அவரின் காந்தீய கொள்கைப்பிடிப்பைப் பற்றியும் பாராட்டி அவர் பற்றிய நூல் ஒன்றினை வெளியிட வேண்டும் என்ற பேராவலால் 1990ம் ஆண்டு கடைசிக் காலப்பகுதில், காந்தி மாஸ்டரை அடிக்கடி சந்திக்க வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டது. அப்போது அவர் இல்லத்தில் இருந்து ஒரு சிறு புத்தகத்தை கண்டு எடுத்தேன். அது திருக்கோணமலை வைத்தியர் ஆறுமுகம் அவர்களால் பாடப்பட்ட கதிரைமலைப் பதிகம், கதிர்காமமலை என்ற பாடல்களைக் கொண்ட சிறு நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பெயரை நான் கேள்விப்பட்டதே இல்லை. இவர் யார் என்பதை அறிய என் மனம் அவாவியது இந்த நூல் அவரது மகனால் 3ம் பதிப்பாகத் திருக்கோண மலையில் பதிப்பிக்கப்பட்டிருந்தது. பெயர் இருந்ததே அன்றி மகனின் விலாசமில்லை ஆனால் இந்நூலினை வெளியிட்டு வைப்பதில் உதவியாக இருந்தவர்களின் பெயர்கள் அதில் இருந்தது. அவர்களைக் கண்டு விசாரித்தேன். கைவிரித்தார்கள். கடைசியில் மகன் முகவரியைக் கண்டு பிடித்து அங்கு விசாரித்தால், அந்த வீட்டைக் காலி செய்துவிட்டு அவர்கள் கொழும்பிற்குப் போய்விட்டதாகவும், அவர்களது கொழும்பு முகவரியை யாருக்கும் கொடுக்க வேண்டாம் என்றும் அந்த வீட்டில் வாடகைக்கு இருப்பவர் எனக்குக் கூறிவிட்டு, தொடர்ந்து சொன்னார் "யாருக்கு இல்லை என்றாலும் உமக்கு இல்லை என்று என்னால் கூறமுடியாது" என்று கூறி மகனின் முகவரியைத் தந்தார். வாங்கிக் கொண்டேன்.

நாட்கள் நகர்ந்தன.

1994 நான் நோய்வாய் பட்டதன் காரணமாக என்னைக் கொழும்பிற்கு அழைத்துச் சென்றார் வைத்தியத்திற்காக என் நண்பன். கொழும்பில் ஒரு மாதம் தங்கவேண்டி இருந்தது. அப்போது ஒரு நாள் நான் தங்கி இருந்த வீட்டுக்காரரோடு உரையாடிக் கொண்டிருக்கும் போது எதேச்சையாக வைத்தியர் ஆறுமுகத்தின் மகனின் விலாசத்தைக் காண்பித்து தெரியுமா என்று கேட்டேன். அவர்கள் சிரித்துவிட்டு "இவா எங்கள் சொந்தக்காரர்" நான் உங்களை அவரிடம் அழைத்துச் செல்கிறேன் என்றார். சொன்னபடி செய்தார்கள்.

நான் அவரிடம் அவரது தந்தையைப் பற்றிக் கேட்ட போது முதலில் ஏதும் கூற மறுத்தவர், நீண்ட நேர உரையாடலுக்குப்பின் எழுந்து சென்று தன் தந்தையார் கைப்பட எழுதிய தந்தையின் நாட் குறிப்பை (ஒரு பெரிய மொணிற்றர் எக்சசைஸ் புக்) கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து காட்டி அதில் இருந்து விபரங்களை எடுத்துத் தந்தார். பேச்சுவாக்கில் அமரர் வேலாயுதம்பிள்ளையைப் பற்றிக் கேட்டபோது, அவர் எங்கள் மாமா என்று கூறி தன் மாமனைப் பற்றிய தகவல்களையும் கூறி அவர் திருக்கோணமலை ஆலயங்கள் பற்றி எழுதி வைத்துள்ள கீர்த்தனைகளையும், அவரது கல்வெட்டையும் என்னிடம் தந்து உதவினார். எனவே 78ம் ஆண்டு நான் தொடங்கிய தேடல் முயற்சி 94-ல் கை கூடியது.

இப்படிப் பல சம்பவங்களை நான் கூறலாம்.

எனவே, ஆய்வுக் கட்டுரை எழுதுவதற்கு மற்றவர்கள் தகவல்களைக் கொணர்ந்து எங்களுக்கு ஊட்டுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது. அதே நேரம் ஆய்வுக்கட்டுரைகளை ஐந்து நாள் ஒரு வாரத்திற்குள் எழுத வைத்துவிடலாம் என்று எண்ணுவதும் தவறு.

எனவே இந்நூலில் வரும் கட்டுரைகள் நிர்ப்பந்தத்தின் நிமித்தம் குறுகிய காலத்திற்குள் எழுதப்பட்ட ஒரு கன்னி முயற்சி இது. இனி வரும் ஆய்வாளர்களுக்கு ஒரு வழி நூலாக - உஷாத்துணையாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான் இதை வெளியிடுகின்றோம். திருக்கோணமலையில் கலை இலக்கிய வளர்ச்சியில் ஆய்வு செய்ய இன்னும் பல விடயங்கள் இருக்கின்றன.

இந்நூல் எப்போதோ வெளிவந்திருக்க வேண்டியது. மேற்படி விழாவின் போது இக்கட்டுரைகள் தொகுத்து வெளியிடப்படும் என்று பரவலான கதை அடிபடவே எம்முயற்சி கைவிடப்பட்டது. இதுவரை காலமும் யாரும் இதை வெளியிட முனையவில்லை என்று அறிந்த பின்னரே காலம் கடந்தாலும் இதனை ஆவணப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு வெளியிட முன் வந்தோம்.

இந்த ஆய்வுக்கு எம்மக்களை ஊக்குவித்த அன்றைய அமைச்சரும் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. P. P. தேவராஜ் அவர்களுக்கு எங்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம். அத்தோடு எமது வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலுக்கு ஆசிச் செய்தி அனுப்பி வைத்தமைக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அத்தோடு இந்த வெளியீட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்ததோடு அணிந்துரையும் வழங்கிய வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் அவர்களுக்கும், திருக்கோணேஸ்வரர் பரிபாலனசபை தலைவர் திரு. கோ. செல்வராஜா அவர்களுக்கும் எமது நன்றிகள்

இந்நூலின் கட்டுரைகள் அனைத்தும் அந்தந்த படைப்பாளிகளாலேயே சரவைபார்க்கப்பட்டது. அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இந்நூலை அழகுற அச்சேற்றித் தந்த கணேச அச்சகத்திற்கும் அதன் ஊழியர்கட்கும் எமது நன்றிகள்.

எமது பணிக்கு நிதி உதவிக்கு வழிகோலித் தந்ததோடு, வெளியீட்டு விழாக்களை நடாத்தி எம்மைக் கௌரவித்ததோடு எமது வெளியீடுகளுக்குச் சந்தைப் படுத்த களம் அமைத்து உதவிய - உதவும் திருக்கோணமலை முத்தமிழ் வளர் கலை மன்றத்தினர்க்கும், திருக்கோணமலை கலைவாணி நாடக மன்றத்தினர்க்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது கலை இலக்கிய முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவிய - உதவும் அனைத்துக் கலை இலக்கிய நெஞ்சங்களுக்கு எம் இதயம் கனிந்த நன்றிகளைக் கூறி விடைபெறுகின்றேன்

வணக்கம்

21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை,

க. சித்தி அமரசிங்கம்
ஈழத்து இலக்கியச் சோலை

5 - 8 - 1996.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93 இல்

கலை
இலக்கிய
ஆய்வு

## திருக்கோணமலையில் நாவல் இலக்கிய வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல் என்பது ஒரு ஆங்கிலச் சொல்; புதுமை என்னும் கருத்தைத் தரும் (Nova) என்னும் சொல்லடியிலிருந்து உருவாக்கியதெனக் கூறுவர். இத்தாலி, ஸ்பானியா போன்ற தேசங்களில் வழங்கப்பட்ட கதைகள், பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டுகளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்ட போது நாவல் என்ற பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

வசன வடிவிலே குறிப்பிடத்தக்க அளவு நீளமுடையதாகவும், புனைந்துரைக்கப்படுவதாகவும், பாத்திரங்களின் பண்புகளையும் செயல்களையும் வாழ்க்கையில் உள்ளபடியே இயல்பான கதைப் பொருளில் அமைத்து அவற்றின் உணர்ச்சி மோதல்களைச் சித்தரிப்பதாகவும் அமைவதுதான் நாவல் எனவும் நாவலுக்கு வரைவிலக்கணம் கூறுவர்.

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை.

என்ற பாரதியின் கூற்றுக்கமைய புதுப்புனைவாகிய நாவல் இலக்கியம் 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆரம்பித்ததெனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல் வெள்ளத்தின் உற்பத்தியை நினைக்கும்போது வேதநாயகம்பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம், இராஜாமையர் கமலாம்பாள், திருக்கோணமலை சரவணமுத்துப்பிள்ளையின் மோகனாங்கி, மாதவையர் பத்மாவதி, சின்னையாபிள்ளையின் வீரசிங்கன் கதை என்பன நினைவுக்கு வருகின்றன.

இத்தகைய நாவல் வளர்ச்சியில் ஈழத்தின் திருக்கோணமலை மாவட்டத்தின் பங்களிப்பு யாது என்பது பற்றி தமிழுக்கும், சைவத்துக்கும், சொல்லில் அடங்காத சேவையாற்றிவரும் இந்து கலாசார அமைச்சர், மாண்புமிகு. திரு. பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் உரையாற்றுவது சாலவும் பொருத்தமான ஒன்றாகும்.

திருக்கோணமலை மண்ணில் பிறந்தவர்கள் பெருமைகொள்ளும் விதத்தில் ஈழத்தின் முதல் நாவலை எழுதியவர்கள் எனக் கருதப்படும் இருவரும் இம்மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களே.

1891ம் ஆண்டு ஜூலை மாதம் பிரசுரமான ''ஊசோன் பாலந்தை'' கதை என்ற கதையே முதலில் எழுதப்பட்ட நாவல் எனக் கூறுவர். ஆயினும் ஊசோன் பாலந்தை என்ற கதை (Osan Valantine) என்ற பிறமொழி கதையின் தழுவலாக இருப்பதால் இதை முதல் நாவல் என்று எடுப்பது தவறு என்று கூறுவாரும் உண்டு. இதை எழுதியவர் திருக்கோணமலையைச் சேர்ந்த திரு. இன்னாசித் தம்பி என அறிகிறோம். இந்நாவலை முதலில் பதிப்பித்தவர் எஸ். தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள். முதற்பதிப்பில் 1500 பிரதிகள் பிரசுரமாயினவென்றும், 1/8 கிறவுன் அளவில் சிறு எழுத்தில் தொண்ணூறு பக்கங்கள் வரும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடப்பட்ட இந்நூல் ஐம்பது சதவிலைக்கு வெளியா யிற்று; என்று அறியக்கூடியதாய் உள்ளது. 1924ம் ஆண்டில் இந்த நூலின் இரண்டாம்பதிப்பு வெளி வந்தது இப்பதிப்பு யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சாயிற்று எனக் கூறப்படு கிறது.

இக்கதை பிறமொழி நூல் ஒன்றைஆதாரமாகக் கொண்டே எழுதி இருக்க வேண்டும் என்பதில் ஐய மில்லை. (Osan & Valantine) என்ற போர்த்துக்கேய நெடுங்கதையை ஆதாரமாக வைத்து இந்நாவல் எழு தப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

அடுத்துப் பலராலும் ஈழத்தின் முதல் நாவல் என்று கருதப்படும் மோகனாங்கி என்னும் நூல் பற்றி ஆராய்வோம். தமிழ்நாட்டில் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், மாநிலக்கல்லூரியிலும் தமிழ்பேராசிரி யராகப் பணிபுரிந்த ஈழத்தவரான திருக்கோணமலை தி. த. கனகசுந்தரம்பிள்ளையின் (1863-1892) இளைய சகோதரரான தி. த. சரவணமுத்துப்பிள்ளை (இங்கே இச்சகோதரர்கள் இருவரும் 'தி' என்ற முதலெழுத் தைப் போடுவதன் நோக்கம் தம் பிறந்த ஊரின்மீதுள்ள அளப்பரிய பாசம் காரணமாகவே, 'தி' என்றால் திருக் கோணமலையை குறிக்கும்) சென்னை மாநிலக் கல்லூ ரியிற் கீழைத்தேயச் சுவடி நிலையத்தின் பொறுப்பா ளராகக் கடமையாற்றியவர் திரு. தி. க. சரவணமுத்துப் பிள்ளை. அப்பணிபுரிந்தவேளையில் தாம் மேற்கொண் டிருந்த வரலாற்றாராய்ச்சியின் பயனாகக் கிடைத்த ஊக்கத்தால் மோகனாங்கி என்ற நாவலை எழுதினார். இது 1895ம் ஆண்டு சென்னை இந்துயூனியன் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இந்நாவலின் கதை தமிழ் நாட்டில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளிப் பிரதேசங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்கமன்னர்கள் ஆட்சிபுரிந்த பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இருநகரிலும் ஆட்சிபுரிந்தவர்களிடையே நிகழ்ந்த அரசியற் போட்டியின் பகைப்புலத்திற் காதல், வீரம், சூழ்ச்சி, முதலிய சம்பவங்களைப் பொருத்தி நாவல் எழுதியதால் வரலாற்று நாவல் இலக்கியத்துறையின் முன்னோடியாக அமைகிறார் திரு. தி. த. சரவணமுத்துப்பிள்ளை. மோகனாங்கி என்ற இவரது நாவல் 1919இல் சொக்கநாதநாயக்கர் என்ற தலைப்பில் சுருக்கிப் பிரசுரிக்கப்பட்டது. இது தமிழ்நாட்டுப் பாடசாலைகளில் பாடப்புத்தகமாக ஆக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மோகனாங்கி தமிழ்நாட்டில் வரலாற்றுக் காலமொன்றை நிலைக்களனாகக் கொண்டு எழுதப்பட்டபோதும், நாவலின் மொழிநடையில் ஈழத்துப் பேச்சு வழக்குகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது நாவலை ஆராய்ச்சி செய்த திரு. சோ. சிவபாதசுந்தரம் என்பவர் விலை, ஆயாசமாயிருக்கு, வீட்டுக்குக்கிட்ட, கனநாளாச்சு, மெத்தநேரஞ் சென்றது, இதாலே, அதலே, மெய்தானா, வலோற்காரம், செவ்வையாக சொன்னான், போனான், சொன்னது, போனாள், சுறுக்கு, விசர், பகலைக்கு, ஆகியவை குறிப்பிடக்கூடிய சில சொற்கள் எனக் கூறியுள்ளார்.

ஈழத்தின் தமிழ் நாவலின் வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்குகின்றதென்று பொதுவாகக் கருதப்பட்டாலும், ஈழத்து மண்ணையும், ஈழத்து மக்களது வாழ்க்கைமுறைகளையும் நிலைக்களனாகக்கொண்ட படைப்புக்களாக அக்காலத்தில் எவையும் அமையவில்லை என்றே கூற வேண்டும். எழுதியவர்கள் ஈழத்தவர்கள் என்பதும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலைத்தவிர ஏனையவை ஈழத்திலேயே பதிப்பிக்கப் பட்டன என்பதுமே ஈழத்தோடு அவற்றுக்குள்ள தொடர்பெனலாம். இவ்வகையிலே இவை ஈழத்துத் தமிழ் நாவலின் முதல் முயற்சிகள் எனக் கொள்ளப் படலாம்.

ஈழத்து மண்ணைக்களமாகக் கொண்டு தமிழ் நாவல் எழுதும் மரபு இருபதாம் நூற்றாண்டின் ஆரம் பப்பகுதியிலிருந்தே தோற்றம் பெறுகிறது.

இந்த வகையில் திருக்கோணமலையில் சிறந்த நாவல்கள் படைத்த மூதூரைச் சேர்ந்த திரு. வ. அ. இராசரெட்ணம், திருமதி. பாலேஸ்வரி நல்லரெட்ண சிங்கன், திரு. க. அருள்சுப்பிரமணியம், திரு. தா. பி. சுப்பிரமணியம், புரட்சிப்பாலன் மூதூர் மு. வே. லோகேஸ்வரன், 'ஜெயலீலா, ரத்னா, ரத்னப்பிரியா,' ஆகிய புனைப் பெயர்களில் தமிழ், ஆங்கில பத்திரிகை களில் எழுதும் லீலா ஜெயரத்னா ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள்.

கொட்டியாபுரத்தைச் சேர்ந்த வ. அ. இராச ரெத்தினம் அவர்கள், கொழுகொம்பு கிரௌஞ்சுப் பறவைகள், துறைக்காரன், ஒரு காவியம் நிறைவு பெறு கிறது, தோணி ஆகிய நாவல்களை எழுதியுள்ளார். இவரது எழுத்துக்களிலே மகாவலி கங்கையின் கரையின் அழகையும், கிழக்குக்கரை எழிலையும் காணலாம் ஈழகேசரியில் தொடர்கதையாக வந்த கொழுகொம்பு என்னும் நாவலும், ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது என்ற நாவலும், ஒரு காவியம் நிறைவு பெறுகிறது என்ற கதையும் நூலுருவம் பெற்றுள்ளன. தோணி என்ற இவரது நூல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ. அ. இராசரெத்தினத்தின் கொழுகொம்பு நாவல், காதல், தியாகம், ஆகிய மனித உணர்வுகளுடன் அமைந்த குடும்பக் கதையாகும். சமூகத்திற் பெண்கள் ஆண்களை நம்பி ஏமாற்றமடைந்து துன்புறாது தமது காலிலே தனித்து நின்று இயங்கவல்ல சமுதாய நிலையை உருவாக்கவேண்டும் என்ற கருத்தை ஒரு பெண் கதாபாத்திரமூலம் உணர்த்தி வைக்கிறார் ஆசிரியர். ஒரு வெண்மணற்கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது என்பது இவரது அண்மைக்கால நாவலாகும்.

திருமதி. பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன், பா. பாலேஸ்வரி என்ற பெயரில் எழுதிய அவரது முதலாவது தொடர்கதையான 'சுடர்விளக்கு' 1965ல் வீரகேசரியில் தொடர்கதையாக வந்தது. 1966 இல் நூலுருவம் பெற்று திருக்கோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக வந்தது. இதைத் தொடர்ந்து, இவரது தொடர்கதைகளான 'பூஜைக்கு வந்த மலர்', 'நினைவு நீங்காதது' 'உறவுக்கப்பால்' உள்ளத்தினுள்ளே. 'உள்ளக்கோயில்', 'மாது என்னை மன்னித்து விடு' என்பவை முறையே மித்திரனிலும், தந்தைவிடுதூது, எங்கே நீயோ அங்கே நானும் என்பன சுதந்திரனிலும், கோவும்கோயிலும் தனிப்பட்ட வெளியீடாகவும், பிராயச்சித்தம் ரஜனி வெளியீடாகவும் உள்ளத்தின்உள்ளே உதயம் வெளியீடாகவும் வந்துள்ளன. இவற்றில் ஒரு நாவல் தவிர ஏனையவை யாவும் நூலுருவம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது ''அமலா உனக்காக ஜெபிக்கிறேன்'' என்ற இவரது தொடர்நவீனம் மட்டக்களப்பு கத்தோலிக்க சஞ்சிகையான தொண்டனில் வெளிவந்து கொண்டிருக்கிறது. 1992ம் ஆண்டு நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவில் தமிழ்த் தொண்டுக்காக தமிழ்மணி பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்ட இருபத்தைந்து பேரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவர் பெண்கள், அவர்களுள் இவர் ஒருவரவர். வீர கேசரிப்பிரசுரமாக வெளிவந்த 'பூஜைக்கு வந்த மலர் என்ற இவரது நாவலின் முதற்பதிப்பு வெளி வந்த நான்காம் மாதத்தில் அந்நாவலின் இரண்டாம் பதிப்பும் வெளி வந்தது என்பது குறிப்பிடக்கூடியது.

திரு. க. அருள் சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' என்ற நாவல் சாகித்திய மண் டலப் பரிசு பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதைவிட இவர் 'நான் கெடமாட்டேன்' 'அக்கரை-பச்சையில்லை', 'நான் நீதியின் பக்கம்' என்னும் நாவல்களை எழுதியுள்ளார். நாவல் இலக்கியத்துக்கு வேண்டிய பொருட்சிறப்பும் ஆக்கச்செம்மையும, கொண்டதாக அவர்களுக்கு வயது வந்துவிட்டது என்ற நாவல் விளக்குகிறது. ஒரு தமிழ் இளைஞன் எப்படித் தன் பெற்றோருக்கு அறிவிக்காமல் ஒரு சிங்களப் பெண்ணை மணந்தபின் தன் பெற்றோரிடம் சென்று அவர்கள் கோபித்தபோது தனக்கு வயது வந்துவிட்டது என்பதை பண்பாக உணர்த்தும் ஒரு நாவல்.

திரு தா. பி. சுப்பிரமணியம் இதயங்கள் அழுகின்றன என்ற நாவலை எழுதியுள்ளார். இது வீரகேசரிப் பிர சுரமாக வெளிவந்தது. வே. தில்லைநாதன் அவர்கள் 'மீட்டாத வீணை' திரு. சண்முகபாலன் 'உமையாள் புரத்து உமா' என்ற நாவலை புரட்சிப்பாலன் என்ற புனைப் பெயரில் அளித்துள்ளார்.

சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் நிறையக் கலைஞர்கள் இருக்கின்ற போதும் நாவல் துறையில் ஒரு சிலரே ஈடுபட்டிருப்பதற்குக்காரணம் எதுவும் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குரிய சில காரணிகளை ஆராயப் புகுந்தால் எழுத்தாளர்களுக்குரிய ஊக்கமும் உற்சாகமும் கிடைப்பது மிகவும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. அதிலும் திருக்கோணமலை எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றிச் சிந்திப்பவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். தமிழ்கலை என்றால் அது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்ற அளவோடு நிறுத்திக் கொள்கின்ற மனப்பான்மை மாறவேண்டும். கடந்த இரண்டாண்டுகளாக மாண்புமிகு அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களின் பெரு முயற்சியால் தமிழும் சைவமும் எழுச்சி பெற்று ஒரு உத்வேகத்தோடு வளர்கிறது என்றே கூறவேண்டும். அதற்கு தமிழர்களாகிய நாம் அவருக்கு நன்றியுடையவர்களாய் இருக்கிறோம்.

மட்டக்களப்புக்கு விபுலானந்தர், யாழ்ப்பாணத்துக்கு ஓர் ஆறுமுகநாவலர் என்றால் திருக்கோணமலைக்கு ஒரு தி. த. கனகசுந்தரம்பிள்ளை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அன்னாரது பெயரில் தி/மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஒரு வாசிகசாலையை நடத்தி வருவது போற்றுதற்குரியது. செயலாளர் திரு. சிவபாதசுந்தரம் கேட்டதற்கமைய திரு. தி. த. சரவணமுத்துப்பிள்ளையின் மோகனாங்கி, திரு. இன்னாசித்தம்பியின் 'ஊசோன் பாலகந்தை' என்பவற்றைத் தேடிப் பதிப்பித்து உதவ வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மிகவும் பணிவாக வேண்டுகின்றேன்.

மோகனாங்கி என்ற நூல் நிச்சயமாக சிதம்பரம் நாவலர் பாடசாலை அல்லது பச்சையப்பன் கல்லூரி வாசிகசாலைகளில் எடுக்கலாம் என நினைக்கிறேன். காரணம் திரு. தி. த. க. வின் மகன் திரு. க. இராஜேஸ்வரன் என்பவர் சிதம்பரம் நாவலர் பாடசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைப் பொறுப்பாளராக (Trust) பல வருடங்கள் கடமையாற்றியவர். திரு. தி. த. க. பச்சையப்பன் கல்லூரியின் தமிழ் பேராசிரியராக இருந்தவர்.

ஆகவே இப்பழம் பெரும் நாவல்களைப் பதிப்பித்து இந்துகலாச்சார அமைச்சின் அடுத்த பணியாக இருக்கவேண்டும் என மிகவும் அன்பாகவும் பண்பாகவும் வேண்டிக்கொள்கிறேன்.

இன்றைய விழாவிலே இக்கட்டுரையைப் படிக்க எனக்கு சந்தர்ப்பம் அளித்த தி/சாகித்திய விழாக் குழுவினருக்கும் எனது நன்றியைக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையின் நாடக முன்னோடிகள்

திருக்கோணமலையின் நாடக வளர்ச்சிக்குத் துணையாக விளங்கிய நாடகக் கலைஞர்கள் பற்றிய விபரங்களை வெளிக்கொணர்வதற்காக ''மேற்படித் தலைப்பில்'' தொகுப்பு நூல் ஒன்றினைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்.

எந்தவித பலனையும் எதிர்பாராது நாடகக் கலைக்கென அர்ப்பணித்த அனைவரும் இத்தொகுதியில் இடம் பெறவேண்டும் என்பதே எமதவா!

இந்த அவாவினைப் பூரணமாகப் பூர்த்தி செய்ய கலையார்வம் கொண்ட நெஞ்சங்களின் பங்களிப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் பகுதியின் நாடக முன்னோடிகள் பற்றி உங்களுக்குத் தெரிந்த தகவல்களை பரிமாறிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு:-

சித்தி. அமரசிங்கம்
நிர்வாகி
ஈழத்து இலக்கியச் சோலை
ஔவையார் வீதி,
திருக்கோணமலை.

**01 - 04 - 1996**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93 இல்

கலை

இலக்கிய

ஆய்வு

திருக்கோணமலை

மாவட்டத்தில்

சிறுகதை வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன உலகில் தமிழ் மொழியில் இலக்கிய வடிவங்களில் ஒன்றான சிறுகதைத்துறை வளர்ச்சி பிரத்தியட்சமான ஒன்று. தமிழ்மொழியிற் சிறுகதை என்கையில் தமிழகத்தில் வ. வே. சு. ஐயரைத் 'தந்தை' ஆகக் கொண்டு மணிக்கொடி, போன்ற பத்திரிகைகளால், சிறுகதை வடித்த கதாசிரியர்களாக, இந்திய விடுதலைக்கு முன் குறிப்பிடத்தக்கவர்கள் கு. ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன், மௌனி, பி. எஸ். இராமையா, பிச்சமூர்த்தி, கல்கி தி. ஜ. ர. ஆவார். ஆங்கில மொழியினின்று, தமிழ்மொழிக்கு சனரஞ்சகத்தை உருவாக்கித் தந்த இச்சிறுகதை வடிவத்தை, தமக்குரிய தனித்துவத்தை - முத்திரையைப் பதித்துக் கொள்ளும் சாதனமாக்கிப் பல சிறுகதைகளை உருவாக்கிப் புகழ் கொண்டனர்.

இறைவன் படைப்பிலே அளந்து வரையறை செய்யமுடியாத அருமையுடையவை எவை? விண் தொட எழுந்து நிற்கும் இமயமா? பாலொளிபரப்பிப் பாய்ந்திறங்கும் நயகரா அருவியா? உளர்ந்து, வளைந்து உலகு புரக்கப் பாயும் புனித கங்கையா? அலை எழுப்பும் சமுத்திரமா? அல்ல அல்ல. இவற்றினும் அளவிடற்கரிய சக்தியுடையது மனிதமனமே. இறைவனின் உலகப் படைப்பின் அருஞ்சிறப்போடு ஒப்பிடக் கூடியது உள்ளம் படைக்கும் கலைக் கற்பனையேயாகும். இது பற்றியே நான்முகன் படைப்போடு இலக்கியத்தை ஒப்பிட்டுச் சீர்தூக்க முனைந்தார் ஓர் புலவர். ஏனைய கலைகள் உணர்வின்பத்தை மட்டும் வழங்கும் அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை இலக்கியம் அந்த உணர்வின்பத்தைக் குறை வற வழங்குவதோடு, கருத்துச் செல்வத்தையும் காத்து வைத்து உதவுகிறது. நமக்கு முன் வாழ்ந்தோர், எல்லோருடைய வாழ்க்கையனுபவத்தையும், சேரக்காத்து, அவர் கற்றவை, பெற்றவை அனைத்தையும், நாமும் கற்றும் பெற்றும் மென்மேலும் வளர்ந்திடுமாறு செய்வது இலக்கியக் கலையாகும்.

இலக்கிய வடிவங்களில் ஒன்றான சிறுகதை இன்று மொழி பேதமின்றி மிகுந்த வரவேற்பைப் பெற்ற ஓர் துறையாய் விளங்குகிறது. மனிதமனம், என்றுமே கதையில் ஈடுபடும் இயல்பு வாய்ந்தது. இதனால், இன்றைய வார மாத இதழ்கள் அனைத்தும் தம் வளர்ச்சி, வருவாய் இரண்டையும் பெருக்கும் அம்சமான சிறுகதைக்கும், அதை எழுதும் ஆசிரியர்கட்கும் முக்கியத்துவம் அளித்து வருகின்றன. இச்சிறுகதைகள் இன்றி இன்று ஓகோவெனப் பிரபல்யம் அடைந்து விற்பனையாகும் வார மாத இதழ்கள் ஏவையேனும் வாழுமா என ஒரு கேள்வியை எழுப்பினால்; விடை-சொல்லித் தெரிய வேண்டுவதில்லை.

சிறுகதை என்ற இலக்கிய வடிவம் இன்றைய சமூகத்தில் பெற்று விளங்கும் அபரிதமான செல்வாக்கை இது வரை கண்டோம். கையில் எடுத்ததுமே, ஒரே தடவையில் வாசித்து முடித்துச் சுவைக்கக் கூடிய அளவினதாயிருப்பது இதன் பிரசித்தத்திற்கு முக்கியமானதோர் காரணமாகும். எந்திரகதியில் ஓடிக்கொண்டிருக்கும் அனைவர்க்கும் கிடைக்கும் சொற்பநேர ஓய்விலே, வாசித்து இலக்கியச்சுவை நுகர்வதற்கு வாய்ப்பான வடிவமே சிறுகதை. ஒரு சிறுகதை மனித வாழ்க்கையின் யாதேனுமோர் அம்சத்தை கவனத் திறனுடன் விமர்சிப்பதாக இருக்கும், நிகழ்ச்சியொன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுபெற, மிகக்கவர்ச்சியாக விறுவிறுப்பான நடையிலே கூறிவிடும். அதேவேளை, படிப்பவர் மனதில் 'பளிச்' சென ஒரு நினைவை - சுவட்டை அதில் நடமாடிய ஒருவர் அல்லது இருவர் ஏற்படுத்தி நிற்பர்; தன்னளவிலே முற்றுப்பெற்று, படிப்பவர் மனதில் நிறைவையுண்டாக்கி - இலக்கியச் சுவையும் ஊட்டும் வல்லமை மிக்கது சிறந்ததோர் சிறுகதையாகும்.

ஈழத்தின் கிழக்கமைந்த நமது திருக்கோணமலை மண்ணில் இந்த இலக்கிய வடிவத்தின் நிலைப்பாட்டினை விளக்க வேண்டுவதே எனது பணியாகும். சிறுகதை வடிவைப் பொறுத்தவரை, திருக்கோணமலையில் 1950 இன் முன், குறித்துக் காட்டக்கூடிய தரவுகள் காணப்படவில்லை. இவ்விலக்கிய வளர்ச்சிக்குக் கால்கோளிட்டவை. 1950 இல் உருவாகிய 'தமிழ் எழுத்தாளர் சங்கம், திருவள்ளுவர்கழகம், மறுமலர்ச்சிக் கழகம், இலக்கியவட்டம் என்று இவைகளேயாகும்.

இச்சிறுகதை ஆக்கப்படைப்பிலே வ. அ இராசரத்தினம் திருமதி பாலேஸ்வரி, அரியநாயகம், எஸ் இராயப்பு, போன்றோர் தீவிரமாக ஈடுபட்டு நின்றனர். அரியநாயகத்தின் சிறுகதைத் தொகுப்புகள் இரண்டு வெளியாகியுள்ளன. ''ஒரு பச்சைமரம் தீப்பற்றி எரிகிறது'' என்பது அதில் ஒன்றாகும். 'காசுமரம்' என்ற இவர் சிறுகதை சுட்டிச் சொல்லக் கூடிய சுவையான தரமான ஓர் படைப்பாக, குழந்தைகளின் மன உணர்வைப் பிரதிபலிப்பதாக அமைந்தது.

1954இன் பின் இத்துறையிலே ஆருப் சிவராமு வ. அ. தா. பி. சுப்பிரமணியம், பா. பாலேஸ்வரி ஆகியோர் இணைந்து கொள்கின்றனர். இக்காலகட்டத்தில் திருக்கோணமலை மாவட்டத்தின் தனித்துவத்தை இனங்காட்ட வல்ல கையெழுத்துப் பிரதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாகலாயின. யாழ் (அமரசிங்கம்) அறிவுச்சுடர் (தா. பி. சுப்பிரமணியம்), என வெளியாகிய சஞ்சிகைகள், திருமலை வாழ் இளம் எழுத்தாளரை ஊக்குவித்து உரம்தந்து வளர்த்து நிற்கலாயின கதை, கட்டுரை, கவிதை என முத்தமிழும் இவ்வேடுகளில் தவழ்ந்து, வாசகர் மனதில் தனியிடத்தைப் பிடித்துக் கொண்டன.

1957 இலே எழுத்துலகில் புகுந்து நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளுடன் நாவல் பலவும் படைத்து அண்மையில் 'தமிழ்மணி' பட்டம் பெற்ற பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம் அவர்களின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

சிறந்ததோர் சிறுகதை, மனப்பதிவை ஏற்படுத்த வல்ல ஒப்பற்ற அதாவது வியக்கத்தக்க நிகழ்வை எதிர் பாராத முடிவைக் கொண்டதாய், கதைப்பின்னலுக்கு (Plot) முக்கியத்துவம் அளிக்கும் பண்புடைதாய் அமையலாம்.

அன்றிச் சிறந்ததோர் பாத்திரம் அதன் உளவியல் பண்பு படம்பிடித்துக் காட்டப்படுவதன் மூலம் வாசகர் நெஞ்சங்களில் இடம் பெறலாம்.

முன்னைய உத்தியை மேனாட்டில் ஓ ஹென்றி, மாப்பசான் சோமசெட்மாம் போன்றவர்கள் தொடக்ககாலத்தில் கையாண்டனர். ஆனால் உளவியல் பண்பை மையமாக்கியும், தரமான மனதைத் தொடும் கதைகள் படைக்க முடியும் என்பதை செக்கோவ் போன்ற ஆசிரியர்கள் செயலிற் காட்டினர். புதுமைப் பித்தன், ஜெயகாந்தன் போன்றோரிடம் இந்தப் பண்பின் பிரதிபலிப்பினைக் காணலாம்.

திருமதி. பாலேஸ்வரி அவர்கள் சிறுகதைகளில் இவ்விருவகையான வார்ப்புகளையும் இனங்காண்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனை, அந்தமுடிவு, போன்றவை முதாலம் தரமான வகையில் இனங்காணப்படுவன.

பிராயச்சித்தம் - இந்தச் சிறுகதை - பாலா என்ற பாத்திரத்தின் யதார்த்தமான மன உணர்வுகளை வெளிக்கொணர்ந்து. இரண்டாம் வகையினதான கதைத் தொகுதிக்குள் இடம் பெறுகிறது. விவேகம், அன்னம், தேனமுதம், செந்தாமரை என ஈழ, பாரத பிரபல சஞ்சிகைகளில் அவர் ஆக்கங்கள் வெளியாகின; பல்லோர் பாராட்டுகளையும் நிறையப் பெற்றுள்ளன. இவர் எழுத்து விறுவிறுப்பான ஓர் நடையைக் கொள்ள வேண்டும் என சிவகுமாரன் அவர்களால் விமர்சிக்கப் பட்டதும் உண்டு திருமலை மண்ணுக்கும் பெருமை சேர்த்து நிற்கும் பாலேஸ்வரி அவர்கள், ஈழத்தின் இலக்கிய வரலாற்றிலேயே தனக்கென்றோர் தனியிடத்தைப் பெற்றுக்கொண்டு விட்டார். என்பதை மறக்க முடியாது.

தா. பி. சுப்பிரமணியம், அவரது சிறுகதைத் தொகுதிகளாக - சிறுவர் வெளியீடாக மலர்ந்தவை 'சந்தனக் குச்சு,' விடாமுயற்சி என்பவை. அவர் பேச்சில் கலந்து விளையாடுஞ் சாமர்த்தியம், எழுத்திலும் இழையோடிடக் காணலாம்.

'களவு போய் விட்டது' - இப்படி ஓர் சிறுகதை காவல் நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட வாக்கியம். ஆனால் அதன் அர்த்தமே வேறுதான், இத்தகைய கை வண்ணம் அவர்க்கேயுரியது. நிஜ வாழ்வின் நிகழ்வுகளையும் கதைவடிவு தந்து, வெற்றிகண்ட இவர் எழுத்தாணிக்கு அஞ்சி மறைந்தவர் பலருண்டு. ஈழத்து இலக்கியச் சோலை வெளியீடாக வந்த திரு. அமரசிங்கம் பதிப்பித்த (1974) 'ஒற்றைப்பனை' தா. பி. அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவார்த்தமான, நோக்கினைப் பிரதிபலித்துக் காட்டு வதெனினும், இதனைச் சிறுகதை எனக் கூறலாகாது. இவரது ஆற்றொழுக்கு நடை. தா. பி. தமிழ் வல்லார்; கதை வல்லார் - எனக் கூற வைக்கும் வார்ப்புகள். இரு பத்தைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகள் இவருடைய வையே

தருமு சிவராமு பிரபல்யம் ஆன ஆக்க இலக்கிய வாதி, சிறுகதையாசிரியர் பாரதத்தின் தலை சிறந்த கதாசிரியர்கள் மௌனி போன்றவராலும் மதிக்கப்பட் டவர். சிறந்த விமர்சகர் இவரது கதைகள் பலவற்றை அக்காலக் கையமுத்துப் பிரதிகள் பெருமையுடன் தாங்கி வந்துள்ளன. 'யாழ்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையில், வெளியான சிறுகதை. 'கதவைத் தொட்டகை' துப்பறி யும் கதையின் நகர்வைக் கொண்டு நடக்கிறது. கதா பாத்திரங்களில், எவர் கையும். தலைப்போடு செயற் படவில்லை கதைத் தலைவன் கொல்ல நினைத்த 'அந்த வில்லன், நாயகனைப் பார்த்தபடி நிற்கிறான். கதாசிரியர் கூற்றிலேயே பார்ப்போம்.

''எத்தனை நேரம் பார்த்துக் கொண்டு நின்றி ருப்போம் கையிலிருந்த கத்தி நழுவியது. அவன் முன்னே ஓடி என்னைக் கட்டித்தழுவினான். எனது கண்கள் கலங்கின."

நமது சொந்த இயல்பை மட்டும் ஏன் நாம் மறந்து போகிறோம். - இதுவே கதையின் முத்தாய்ப்பு. அவ்வாறாயின் கதையின் தலைப்பு - ஆமாம் தன்னோடு - வாசகனைப் புரிந்து கொண்டு சேர்த்துக் கொள்ள வேண்டிய சொல் ஒன்றை அவாவி நிற்கிறது.

ஆம் ''மனக் கதவைத் தொட்டகை'' - எனப் பொருள் தருவதாக, பொருள் பொதிந்ததாக - இத்தலைப்பு அமைத்துள்ள சிறப்பினைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறந்த சிறுகதை இலக்கியம், கவர்ச்சியான தலைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்னும், கதைக் கருவை அது கோடி காண்பிப்பதாய் இருக்கலாமேயன்றி முடிவை வெளிக் காட்டி விடலாகாது.' என்ற வரன்முறை, இங்கு நிதர்சனமாகியுள்ளமை தெளிவாகிறது. கதை வடிவ அமைப்பிலும், கூறுந்திறத்திலும், இவ்வாசிரியர்கள் கைப்பட்டு வளர்ச்சியுற்றுச் செல்வதைக் காணலாம்.

1961 - 66களில் சிறுகதைத் துறையை அணி செய்பவராக சான்டி கோ சுப்பிரமணியம், ஜீவா அசனார். கா. இரத்தினலிங்கம். போன்றோரைக் குறிப்பிடலாம்; அக்காலத்தில் எமது மாவட்டத்தில் வெளிவந்த கையெழுத்தேடுகளில் தமது திறமையைக் காட்டியவர்கள் 'புரட்சிபாலன்' என்பவர் சிறுகதை ஆக்கங்கள் 'ஞானதீபம்' என்ற அச்சுப்பிரதியிலும் வெளிவந்துள்ளன. ஆனந்தி, அல்லி, இளங்கதிர், இவை இக்காலக் கையெழுத்தேடுகளே. மலைமதி சந்திரசேகரம்-இவர் சிறுகதைகள் பலவும் 'ராதா' எனும் வாரப் பத்திரிகையில் வெளிவந்துள்ளன. சமகால நிகழ்வுகளை - மையமாக்கி - காதல் கருவை அடிப்படையாய்க் கொண்டு இவர்களின் சிறுகதைப் படைப்புகள் அமைந்தன. புரட்சி பாலனின் கைவண்ணம் மட்டும், மெல்லியதனமான பிரதேச வாடையைக் கொண்டு விளங்கியமை - குறிக்கத்தக்க வளர்ச்சியே எனலாம். கல்கி, குமுதம், ஆனந்த விகடன் இவற்றில் வெளிவந்த ஆக்கங்களில் காணப்பட்ட வசன நடை, சினிமா நடை, என்றிவை இக்காலச் சிறுகதைகளிலும் பொதுவாகக் காணப்பட்டன.

1970 இனை நோக்குகையில் ''முன்னோடிகள்'' என்ற கலா இலக்கிய விமர்சகர் அமைப்பினால் ஓர் விழிப்புணர்வு ஏற்பட்டதெனில் தவறில்லை. மு. இராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபூர், ஆலன், இராஜதருமராஜா, மு வே. யோகேஸ்வரன், திருமலை சுந்தர், க. கோணேஸ்வரன் இவர்கள் எழுத்தாக்கங்கள். இத்துறைக்கு மெருகுசேர்த்தன, சமுதாய பாரம்பரியத்தை எடுத்துக்காட்டி, இடதுசாரிப் போக்கை ஆதரித்து, எழுத்தாக்கம் படைத்த, இராஜதர்மராஜா அவர்களின் படைப்புகள் பெனடிக்ற் பாலன், செந்திநாதன் போன்ற பலரை ஆகர்ஷித்து நின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அருள்சுப்பிரமணியம் - இவர் அறிமுகமானது சிறுகதை மூலமே ஆயினும். அவர் பெருமை சிறந்தது நாவல்களாலேயே. ஆலங்கேணி யோகேஸ்வரனின் கதைகள் பல ராதாவில் வெளியாகின. திருமலை சுந்தா அவர்களின் சிறுகதைத் தொகுப்பு 'வேள்வி' எனும் தலைப்பைத் தாங்கி வெளிவந்தது. சிறுகதை வரலாற்றில் இதனை ஓர் மைல்கல் எனலாம். இதிலமைந்த சிறுகதைகள் மத்திய வர்க்கத்தினர் வாழ்க்கை. கிராமியச்சூழல் என்றிவற்றை மையமாக்கி எழுந்தவை 'சப்பாத்துக்கள்' - இச்சிறுகதை ஓர் யதார்த்தப்படைப்பு.

''அவன் ஏன் சிறுகதைகளை எழுதினான் ? அவனால் தான் பங்காளியாகக கலந்து கொண்ட சம்பவங்களை இதயத்துள் பூட்டி வைக்க முடியவில்லை; அதற்கு அவன் தேர்ந்தெடுத்ததுதான் இச்சிறுகதை வடிவங்கள்'' அதனால் அவன் எழுத்தாளன் ஆக்கப்பட்டான்.........

சுயகணிப்பீடாக எழுத்தாளர் சுந்தா வேள்வியின் முகவுரையிலே எழுதியுள்ள வாசகங்கள், இவை ''மன்னிப்பு விமர்சனம் எனக்குத் தேவையில்லை'' என்று கூறும் கருதி ஆசிரியரின் நேர்மைத்திறன், தன்னம்பிக்கை இவற்றுக்கு மேல்வரிச் சட்டம்.

1980 இன் பின் ஒரு புதிய வீச்சுக் காணப்படுகிறது. இளைய தலைமுறை மைக்கல் கொலின், முகமட் சாலி, தே. எஸ். வி, வோமன், சித்திரா நாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன், தாரணி, *M. S. A.* காதர், புனிதன். போன்றோர் இத்துறையில் பங்கு கொண்டனர். ஒரு கிராமத்து மண்சிவக்கின்றன, சித்திரர் நாகநாதனின் விடியாத இரவுகள், அரங்கேறாத திருமணம் என்றிவை, சமூகப் பிரச்சனையை மையங் கொண்டெழுந்தவைகளாகும்.

எமது மாவட்டத்தில் இதே காலப்பகுதியில் கையேடுகள் பலவும் வெளிவந்தன. கோணைத்தென்றல் சங்கப்பலகை, கமலை, தாகம், யதார்த்தம், வசந்தம் ஈச்சம்பழம், என்பவை பலவாகும். இவையனைத்தும் திருக்கோணமலை மாவட்டத்தில் இளம் சிறுகதை ஆர்வலர்களுக்கு வாய்ப்பை அளித்து வளர்த்தன என்பது உண்மை. சிறுகதை இலக்கியத் தரத்தினை இங்கு விமர்சிக்க முடியாது எனினும் கதையின் பரப்பு கதைக்களமையம் விசாலித்தே சென்றது.

மூதூர் மாவட்டத்திலே சிறுகதைக்குப் பங்களிப்புச் செய்தவர்களாக காணப்படுபவர் பட்டியல் தனித்துள்ளது.

முன்பு குறிப்பிட்ட வ. அ. இராசரெத்தினம், உபையத்துல்லா கலீல் கண்டு, ஏ. எஸ். இப்றாகீம், முகைதீன், எஸ். சி. அருள்வரதன், காலஞ் சென்ற மன்சூர், கனைதா கரீம். அமானுல்லா செ. துரைநாயகம் ச. சச்சிதானந்தம், கா. நடராஜா, மகாலிங்கம் போன்றோர் குறிப்பிடக் கூடியவர். சமூகம், காதல், எனும் இவற்றினடிப்படையில் இவர்கள் படைப்புகள் அமைந்தன. வ. அ. அருள்வரதன் இருவரும் இவற்றுடன் சமயம், வரலாறு, வீரம், இவை பற்றியும் எழுதினர் சாதியைக் கண்டிக்கும் குரலை வ. அவின போர்ப்பறை முழக்கி நிற்கக் காண்கிறோம். ''பால்ய வயதிலே திருக்கொட்டியாபுரப்பற்று மூதூரைச் சேர்ந்த சத்திய நாதன் இப்படிச் சிந்திக்க வில்லைத்தான்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ. அவின் கதையாரம்பம் இது. சிறுகதைபற்றி மேலை நாட்டார் எட்கார் அலன்போ - சிறுகதை ஆசிரியர் கூற்று இங்கு நோக்கத்தக்கது'' சிறு கதையின் முதல்வாக்கியம் படிப்பவன் மனதை இழுத்துப் பிடிக்கவில்லையென்றால் அக்கதை பயனற்றது. பயனற்ற ஒரு சொற்கூட சிறுகதையில் இடம் பெறக்கூடாது''. இக்கூற்றைக் கடைப்பிடிக்கும் கைவண்ணம் வ. அவிற்குரியது.

## முடிவில் ஓர் சில வார்த்தை

எனது இம்முயற்சி பூரணமுடைத்தன்று. இங்கொன்றும் அங்கொன்றுமாய்த் தேடிக் கோத்த இந்தச் சரத்திலே விடுபட்ட நன்மணிகள் - ஒளிவிட்டுப் பிரகாசித்தவை பலவாகக் கூட இருக்கலாம் - அவ்வாறு நிகழ்ந்திருப்பின்-

நிச்சயம் எனது அறிவின்மை - ஆராய்வின்மையே காரணமன்றி வேறேதுமின்று. இத்துறை கொண்டுள்ள ஆய்வுபாரியது யாம் பெற்றகால எல்லை குறுகியது.

எமது மாவட்டச்சிறுகதைப் பங்களிப்புப் பற்றிய ஆய்வு இந்த இருபது நிமிடத்துக்குரியதாயமைகிறது. இங்கு யார் உயர்ந்தவர், யார் சிறந்தவர் என விமர்சிக்கும் நோக்கம் எனக்கில்லை.

கதை உயிர்பெறுவது ஆசிரியரின் திறனால்-அவர் கற்பனை வளர்த்தால்-அதை வெளிக் கொணரும்-கூறுந்திறத்தால் எனக்கூறி, திருமலை மாவட்டத்தில் சிறுகதையாகிய இலக்கிய வடிவிற்குப் பங்களிப்புச் செய்த அனைவரையும் மானசீகமாய் நினைவு கூர்ந்து. அன்புடன் வாழ்த்தி இதனை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93 இல்

கலை

இலக்கிய

ஆய்வு

திருக்கோணமலை
பிரதேசத்தின்
கவிதை வளர்ச்சியும்
கவிஞர்களின் பங்களிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற இந்தப் புண்ணிய பூமியிலே திருக்கோணேஸ்வரத்தை அடிப்படையாக வைத்துத் தனியான கவிதை இலக்கிய மரபொன்று பன்னெடுங்காலத்திற்கு முன்பே உருவாகி நிறைவுபெற்று நின்றது என்பதற்குக் "கைலாசர் புராணம்" "கோணேசர் கல்வெட்டு" திருக்கோணமலைப் புராணம்" என்பவை மூன்றும் சான்றுகளாகும். இவ் வழிவந்த "கோணமலை அந்தாதி" என்ற நூலை இயற்றியவர் சிதம்பரநாத பண்டாரம் சுப்பிரமணியம் ஆறுமுகப் புலவர் ஆவர். இவர் திருக்கோணாசல சைவ ஆதினத்தைச் சேர்ந்த ஒரு பெரும் புலவராகத் திகழ்ந்தவர் என்று கலாநிதி திரு. ஆ. சதாசிவம் அவர்கள் தொகுத்து வெளியிட்ட "ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே, எமது கவிதை வளத்தினது தொன்மைக்கும் ஆறுமுகப்புலவரின் "கோணமலை அந்தாதி" ஆதாரமாகும்.

இவர் வழி நின்று திரு. வே. அகிலேசபிள்ளை என்பவர் "திருக்கோணநாயகர் பதிகம்" "வில்லூன்றிக் கந்தசாமிப் பதிகம்" திருமலைப் பத்திரகாளி திரு ஊஞ்சல்" "நிலாவெளி சித்திவிநாயகர் திரு ஊஞ்சல்" என்று இவ்வாறு சமய இலக்கியங்களைப் படைத்து வந்தார். இதன் பின் வந்த திருக்கோணமலை தமிழறிஞர் தி. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் 1880ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகம் சென்று சேவையாற்றிய போது பாடியவற்றுள் ''திருக்கோணமலை முத்துக்குமாரசாமி வெண்பா'' குறிப்பிடத்தக்கது. இவரது சகோதரர் திரு. தி. த. சரவணமுத்துப்பிள்ளை என்பார் ''திருக்கோணமலை முத்துக்குமாரசாமி திருப்பொன்னூஞ்சல்'' 'தத்தை விடு தூது' என்பன படைத்துக் கவித்தரம் காட்டியுள்ளார்.

இவர்கள் மரபிலே நின்று சமய இலக்கியம் படைத்தவர்களுள் அண்மைக்காலம் வரை வாழ்ந்த கழகப் புலவர் திரு. பெ. பொ. சிவசேகரம் அவர்களும், தற்போது நம் மத்தியில் வாழ்ந்து கொண்டு பல சமய இலக்கியம் படைத்து விடும் சைவப் புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

திரு. பெ. பொ. சி. அவர்கள் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையிலும் திருவள்ளுவர் கழகப் புலவராக இலக்கிய உலகிலும் அரியபடைப்புக்களை உருவாக்கியுள்ளார். ''காளிகவி மாலை'' ''தம்பலகாமம் கோணநாயகர் போற்றித் திருப்பதிகம்'' ''கந்தளாய் பிள்ளையார் தோத்திரம்'' ''கதிர்காமம் திருவருட் பாமாலை'' போன்ற பல சமய இலக்கியங்களைப் படைத்தார்.

மேலே சொல்லப்பட்ட இவரது முன்னோர்களினது சமய இலக்கியப்படைப்புகளுக்கும், இவரது படைப்புகளுக்குமுள்ள வேறுபாடு என்னவெனில் ''முன்னையோர் இயற்கை எழில் இரசம், பக்திரசம், என்பன மட்டும் சொட்டச் சொட்டப் பாடினார்கள். இவரோ இவ்விருரசங்களுடனும் அன்றாட பிரச்சனைகளையும் தமது பாடல்களிலேயே ஏற்றிப் பாடியுள்ளார். ஆசிரியத் தொழில் புரிந்து வந்த இவர் கதிரமலைக் கந்தனை வேண்டுதல் செய்யும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆசிரியர் சம்பளம் அன்றாட வாழ்க்கைச் செலவிற்குப் போதாது, என்ற தமது உள்ளத் தவிப்பினை பின்வருமாறு பாடி வெளிப்படுத்தி உள்ளார்.

''கலைபயிற்றுந் தொழிலமர்ந்த மாணவர்க்குக்
கருத்திருத்திப் படிப்பித்தும் வாழ்க்கை தன்னை
நிலை பெறச் செய் பொருள் வருவாய் இன்றிவாடும்
நிலைமையினைப் போக்க வழி சொல்வாய் கதிரை
மலை வாழும் கற்பகமே.''

இது போலவே இவரது காளி கவி மாலையிலும் சம காலப் பிரச்சனைகளை முன் வைத்துள்ளார். முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இனப் பிரச்சனைத் தாபதீபம் தோன்றிய 77க்குப் பின் பாடிய அவரது காளி கவி மாலையில் பல ''காரசார'' மலர்களையும் வைத்துக் கோர்த்துள்ளார் கொடுமைக்கும் அநீதிக்கும் நீயே பரிகாரம் காண்பாயாக என்று, அன்றாடத் துன்பங்களை அம்பாளிடம் சமர்ப்பித்த தன்மையை பின்வரும் பாடல் வரிகளில் காணலாம்.

''ஆயுதந்தாங்கி அநியாயஞ்செய்யுமரக்கரினால்
மாயுறு ஞாலம் கொலைக்கள மாயின்று மாறுதம்மா
தீயினும் வெய்யவித் தீவினையாளர் திருந்துதற்கு
நீயுளம் வைத்திடில் காணுமே பத்திரகாளிகையே''

சமய இலக்கியப் படைப்புக்கள் வரிசையில் சைவப் புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் கவித்துவமும் குறிப்பிடத்தக்கது. திருக்கோணமலை மாவட்டத்தில் பல தலங்கள் மீது திரு ஊஞ்சல் பாடல்களைப் பாடியுள்ளார். பாரம்பரியக் ''கதிர்காமப் பாத யாத்திரை'' க்கு 77முதல் அரசியல் சமூகச் சூழ்நிலை பாதகமாய் இருந்த காரணத்தினால் வழமை போல் பாத யாத்திரை மேற்கொள்ள முடியாதிருந்த பண்டிதர் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சைக் கதிரமலையானிடம் தூது விடுவதாகப் பாடிய ''நெஞ்சு விடு தூது'' அவரது கடந்த காலப் பாத யாத்திரை அனுபவங்களைப் பிறருக்கும் புகட்டி நிற்கின்றது.

ஆலயங்கள் மீது பாடியவர்களுள் திருமலைப் பத்திரகாளி அம்மன் காவியம் பாடிய வ. கோ. வேலுப்பிள்ளை, பத்திரகாளி அம்மன் தேர்ச்சிந்து பாடிய வேலாயுதப்பிள்ளை, நிலாவெளி முத்துமாரியம்மன் காவியம் பாடிய உமாபதிசிவம், ஆலங்கேணிப் பிள்ளையார் மீது பாடிய அ. கௌரிதாசன் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். சமயமும், சமூகமும், நெருங்கிக் கைக்கோர்த்திருந்த கால கட்டத்தில் புலமை வெளிப்பாடுகள் பெரும்பாலும் சமய இலக்கியப் படைப்புக்களாகவே வெளிவந்தன.

காலப்போக்கில் திருமலை நகரிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஊர் வாரியால் கையெழுத்துச் சஞ்சிகைகள் உருவாகி அவை கவிஞர்களுக்கும் ஏனைய எழுத்தாளர்களுக்கும் களம் கொடுத்து வந்தன.

நகரில் ''யாழ்,'' கமலை'' போன்றவையும் ஈச்சந்தீவில் இருந்து ''ஈச்சம்பழம்'' நிலாவெளியில் இருந்து ''நிலவொளியும்'' இத்தகைய சஞ்சிகைகளில் சிலவாம். நகரில் தட்டச்சு, கல்லச்சு வசதிகள் பெருகி வர பிற்காலத்தில் ''கோணைத் தென்றல்'', 'வசந்தம்' ''தாகம்'' போன்ற சஞ்சிகைகளும் கவிஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து ஊக்குவித்து வந்தன. இவற்றுள் ''வீணை வேந்தன்'' என்ற புனை பெயரில் திரு. த. அமரசிங்கம் அவர்கள் வெளியிட்ட யாழ் கையெழுத்துச் சஞ்சிகையில் ஓவியராகவும், கவிஞராகவும் ''ஜீவராம் அருப் பிரமீன்'', இலக்குமி இளங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயர்களுள் எழுத்துலகுக்கு பிரவேசித்த தர்மு சிவராமு இன்று தமிழகத்திலேயே தலை சிறந்த கவிஞராக விமர்சகராகத் திகழ்கின்றார்.

'கண்ணாடி உள்ளிருந்து', 'கைப்பிடி அளவு கடல்' 'மேல் நோக்கிய பயணம்', என்பன இவர் படைத்த கவிதை நூல்களாகும்.

''பிருமிலின் படிமவியல் இரண்டாயிரம் வருடத் தமிழ் கவிதைச் சரித்திரத்தில் புதுமையானது.'' என்று 'எழுத்து சி. சு. செல்லப்பாவினாலும்' ''இவன் தமிழிலக்கியத்தில் ஒரு மாமேதையாகக் கனிந்திருக்கின்றார்'' என்று ஞானகிராமனாலும் பாராட்டப் பெற்ற பிருமின் தர்மு சிவராமுவின் கவித்துவத்திற்கு வித்திட்டது திருக்கோணமலையேயென நாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம்.

இவரைப் போலவே 'யாழ்' கையெழுத்துச் சஞ்சிகையில் களம் அமைத்த சிவானந்தம் சிவசேகரம் என்பவர் திருக்கோணமலை மண்ணிலே பிறந்து மண்ணிலே பயின்று பேராதனைப் பல்கலைக் கழக பொறியியற் துறைப் பேராசிரியராகப் பணி புரிந்து இன்று லண்டன் மாநகரில் வாழ்கின்ற வேளையிலும் பாரதியின் பேரவாவைப் பூர்த்தி செய்து நாமமது தமிழரெனக் கொண்டு வாழாமல் தேமதுரத் தமிழோசையை உலகம் எல்லாம் தன் கவிதைகள் மூலம் பரப்பிக் கொண்டிருக்கின்றார். 1989திலிருந்து ஒல்லாந்திலிருந்து வரும் அ. ஆ. இ. ஜேர்மணியிலிருந்து வரும் 'தூண்டில்', ''புதுமை'' பிரான்ஸிலிருந்து வரும் ''ஓசை'' சுவிஸிலிருந்து வரும் ''மனிதம்'' நோர்வேயிலிருந்து வரும் ''சுவடுகள்'', ''சக்தி'' இங்கிலாந்திலிருந்து பிரசுரமாகும் ''பனிமலர்'' ஆகிய சஞ்சிகைகளுக்கு இவர் கவிதைகள் அனுப்பி வருகிறார். கடல் கடந்து வாழ்ந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மண்ணிலே சொந்தச் சோதரர்கள் துன்பச் சூழ்நிலையில் வாடுவதையே மனதில் கொண்டு பெரும் பாலும் அவற்றைப்பாடுவதையே பணியாகக் கொண் டவர். கடல் கடந்த காரணத்தால் தடை தயக்கம் இன்றி உணர்ச்சிமடை திறந்து பாய்கின்றது இவர் கவி. ''நதிக்கரை'' 'மூங்கில்' செப்பனிட்ட படிமங்கள்'', தேவி எழுந்தாள் என்ற தலைப்புக்களில் ஏற்கனவே மூன்று கவிதைத் தொகுதிகள் வெளிவந்து இருக்கின்றன.

இவரது பாடு பொருளுக்கு உதாரணமாக, 1991ல் வெளியான ''தேவி எழுந்தாள்'' தொகுதியில் ''எங்கள் எண்பதுகள்'' என்ற தலைப்பில் எடுத்தாண்ட

''பிணங்களை எரிக்கும் உரிமையை
ரப்பர் டயர்களுக்கு சிதைகள் இழந்ததால்
மயானங்கள் தனிமையில் வாடும்''

என்ற வரிகளையும் ''மூடனும் முழுநிலவும் என்ற தலைப்பில் வெளியான கவிதையின்

''கொம்பு அறுத்த பசுவின் காலில்
குளம்புகள் கூரிய வாளாய் வளர்ந்தன''

என்ற வரிகளையும் காட்டலாம்.

பின்னையதில் சாதுவான பசுவின் இரண்டு கொம் புகளை ஓடிக்கப் போய் அவற்றை மிரளச் செய்து இரண்டுக்கு நாலு என்ற விகிதத்தில் குளம்புகளில் கூரிய. பாரிய ஆயுதங்களை முளைக்கப்பண்ணி வன்செயல் களைப் பூதாகாரமாய் வெடிக்கப்பண்ணி நிற்கும் இன்றைய யதார்த்த நிலை காட்டப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் அடுத்து வருபவர் யாழ் கையெழுத்துச் சஞ்சிகையின் ஆரம்ப எழுத்தாளர் கலாநிதி சி. சத்தியமூர்த்தி அவர்கள். இவரது மருமக னார் கோயம்புத்தூரில் தமிழ் பேராசிரியராகப் திகழ்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர். இருவரும் திருக்கோணமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த தம்பலகாமத்தில் பிறந்தவர் 25-01-1981ல் வெளியான கோணேசர் கும்பாபிஷேக மலரில் பிறந்த மண்ணை மறக்காமல் 'பிறந்த மண்' என்ற தலைப்பில் தனது கோணேஸ்வர தரிசன அனுபவங்களை அழகுத் தமிழ் வடிவில் வடித்துள்ளார்.

இனி திருமலை மண்ணிலே பிறந்து மண்ணிலே வளர்ந்து கவிதை படைத்து மறைந்தவர் வரிசையில் எண்ணினால் முதலில் வருபவர் அண்ணலார் அவர்களே 1930ல் பிறந்து எம். எஸ். எம். சாலிஹ் என்ற இயற் பெயரோடு பயிற்றப்பட்ட தமிழாசிரியராய் தலைமை யாசிரியராய்ப் பணிபுரிந்தவர். 12 வருடங்களாக ''அண்ணல்'' என்ற பெயரோடு எழுதிய கவிதைகள் 1969ல் தொகுக்கப்பட்டு அரசு வெளியீடாக எம். ஏ. நுஹ்மான் அவர்களால் வெளியிடப்பட்டது. கவிஞர் அண்ணல் காலமாகிவிட்டாலும் இவரது அழகியல் கலந்த சந்தம் மிகுந்த பாடல்கள் கலைஞர்கள் மனதை விட்டு அகலாதவை.

''கட்டித்தயிர் தொட்டுப் பிசை காந்தள் மலர்க்கைகள்
பிட்டுத் தரவுண்பேன் உளம் பெரிதும் மகிழ்வெய்தும்
வட்டக் கருவிழியாள் அகம் மகிழும் நடைபோடும்
குட்டிப் பயல் நினைவும் அவள் பரிவும்
-எனைக் கொல்லும்''

இது அண்ணல் படைத்த ஒரு பானைச் சோற்றில் ஒரு சோறு.

மறைந்த கவிஞர்களில் மற்றுமொருவர் ''திருக் கோணமலை கவிராயர்'' என அழைக்கப்பட்ட ஜனரஞ் சககவிஞர் திரு. தா. சி. வில்வராஜா ஆவார். அரசியல் மேடைகளில் எதிரணியினரைக் கவிதையடிகளாற் சாடிச் சவுக்கடி கொடுப்பவர் ''நல்லவன் பெரியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லப்பட்டு சமுதாயத்தில் போலிக் கௌரவத்தில் வாழ்ந்தவர்களின் பொட்டுக் கேடுகளையும் பகிரங்கமாய்ச் சுட்டிக் காட்டி வந்த நவீன காளமேகம் இவன், கவியரங்குகளில் தோன்றி, ''ஆனா என்னும் எழுத்தை அரிவரியில் சொல்லி வைத்த மீனாட்சியம்மன் மெய்யடிக்கே என் வணக்கம்'' என்று தொடங்கினால் சபையிலே காது கொடுத்துக் கேட்கும் அமைதியும் தொடர்ந்து கரகோஷ ஆரவாரமும் மாறி மாறி நிலவும். இவரது அகால மறைவு திருமலைக்கும் கவிதை உலகிற்கும் ஒரு பெரிய இழப்பாகும். இவரது மறைவை யொட்டி வீணை வேந்தன் எழுதிய நினைவாஞ்சலி கட்டுரை அண்மையில் லண்டனில் இருந்து வெளியாகும் ''தமிழோசை'' பத்திரிகையில் ''என்ன கவிதை வேண்டும்'' என்ற தலைப்பில் பிரசுரமாகியது.

இனி இன்று நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிற கவிஞர்களை வகைப்படுத்தினால் எழுதித் தேர்ந்தவர்கள், எழுதி ஓய்ந்தவர்கள், எழுதப் பயந்தவர்கள் எனலாம். இவர்களில் முதலாம் வகையைச் சேர்ந்தவரைத் தவிர ஏனையோரில் பெரும்பாலோர் கலண்டர்க் கவிஞராகவே வாழ்கிறார்கள். இவர்களெல்லாம் நான் முன்னே சொன்ன உள்ளூர்ச் சஞ்சிகைகள் மூலம் பிரவேசித்தவர்கள்.

தாமரைத் தீவான் ஒரு மூத்த கவிஞர். தாமரைத் தீவில் பிறந்து ஈச்சந்தீவில் வளர்ந்து சோ. இராஜேந்திரன் என்ற இயற் பெயரோடு நாட்டின் பல பாகங்களிலும் நல்லாசிரியனாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று இன்று நகருக்குள் புகுந்திருக்கின்றார். இவரது மருமகனார் ''ஈச்சையூர் தவா'' தொகுத்து வெளியிட்ட ''ஈச்சம்பழம்'' சஞ்சிகை வளர்ச்சிக்கு ஊக்கமளித்துப் பல கவிஞர்களை வளர்த்து விட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக எல்லா தேசிய தினசரிகளிலும் இவரது மரபுக் கவிதைகள் படைப்புக்கள் மலிந்திருந்தன. இவர் பாடல்கள் சில பாப்பாப் பாடல்களாகத் தொகுக்கப்பட்டுப் ''பிள்ளை மொழி'' யாகத் திருமலை அன்பர் நிதியத்தினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. மற்றுமொரு கவிதைத் தொகுதி ''கீறல்கள்'' வெளிவந்தது.

ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருவாளர்கள் க. தங்கராசா, ச. அருளானந்தம் என்பவர்கள் தாம் பிறந்த ஊர் அபிமானத்தில் ஊர்ப்பெயரைப் பாதி பாதியாகப் பிரித்தெடுத்து முன்னையவர் ''ஆலையூரன்'' என்றும் பின்னையவர் ''கேணிப்பித்தன்'' என்றும் தமக்குப் பெயர் புனைந்து கொண்டு தரமான பல கவிதைகள் படைத்து வந்தனர். இருவரும் இன்று கல்வி அதிகாரிகளாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திரு. ச. அருளானந்தம் என்பவரின் குழந்தைப் பாடல்கள் தொகுக்கப்பட்டு ''இன்பக் கனிகள்'' என்ற பெயரில் கவிதை நூலாக வெளிவந்தது.

திருக்கோணமலையைச் சேர்ந்த இன்னுமொரு இளங்கவிஞன் ''மகிபாதேவன்'', சென்னையிலிருந்து வெளியிட்ட ''வேருன்றும் விழுதுகள்'' கவிதைத் தொகுதியில் சமர்ப்பண கவிதையில்;

''எத்தனையோ இன்னல்களை
இரையாகத் தின்றுவிட்டு
இன்னும்
எழுந்து நிற்கும் என் மண்''

இப்படிக் கூறுகிறார்.

'' பார்த்ததும் பயந்ததும்'' என்ற தலைப்பில்,
பரமன் தன் தேவிக்கு பாதி உடல் தந்தான்
பாவம் சுடுகாடே கதியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பரந்தாமன் தன் துணையை நெஞ்சில் வைத்தான்
பத்தவதாரத்தில் சிதறுண்டு போனான்
பிரம்மன் நாக்கில் வைத்து
தன் பெண்டைக் காத்தான்
குடியிருக்க விடில்லாது தடுமாறிப் போனான்
பார்த்தான் - பயந்தான் மனிதன்
தன் மனைவியை
அடுப்பனையில் அடக்கி வைத்து விட்டான்''.

''தமிழகத்து கவிஞர்களுக்கு ஈழத்துக் கவிஞர்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்களல்ல'' இப்படிக் கூறியவர் கவிஞர் கண்ணதாசனின் மருமகனும் உலகத் தமிழ் கவிதைத் தொகுப்பாளருமான கவிஞர் அழகாபுரி அழகுதாஸன் (செய்தி 02-07-82 தினகரன்).

மேற்படி உலகத் தமிழ்க் கவிதைத் தொகுப்பான ''செம்மாங்கனி'' அறிமுக விழா, பொது நூலக அறிவியல் வட்டத்தினால் நூலக கேட்போர் கூடத்தில் பண்டிதர் இ. வடிவேல் ஐயா அவர்களின் தலைமையில நடைபெற்றது. ஆரம்பத்தில் மங்கள விளக்கை ஏற்றிய தலைவர் பின்னர் அதனை அணைத்தார். நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருந்த கவிஞர் சுவைஞர்களிடம், தான் விளக்கை அணைத்தற்கான காரணத்தைக் கவிதையாக விடைதரும்படி வேண்டுகோள் விடுத்தார்.

உடனடியாக 20 கவிதைகள் சமர்ப்பிக்கப்பட்டன. வினாவுக்கு விடையாகப் பின்வரும் கவிதையை சுட்டிக் காட்டும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'' அகத்தின் பொலிவுக்கு
திரியில் ஒளிச்சுடர்
முகத்தின் தெளிவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியில் புகைச்சுடர்
நோக்கிய தலைவர்
திரியைத் தீண்டினார்
நோக்கம் மங்கள
பொலிவு காத்தார்.

இவ்வாறான பாராட்டுக் கவிதையை யாத்தவர் கவிஞர் தா.பி-சுப்பிரமணியம் ஆகும்.

இந்தக் கவியரங்கில் பின்வருவோரும் பங்கு கொண்டிருந்தனர்.

கா. இரத்தினலிங்கம், சின்னையா ஜோஸப், நல்லை அமிழ்தன், பாரதிபாலன், நிலா தமிழின் தாஸன், அமிர்த சந்திரபாலன், புரட்சிவண்ணன்.

மேற்கூறியவர்களுக்கு வயதில் இளையவர்களாகி கவிதை உலகில் பிரவேசித்தவர்கள் ஏராளம். நகரில் நவசோதிராசா, கோணேஸ்வரன், ஷெல்லிதாசன், இரத்தினலிங்கம், தா. பி. சுந்தா, மலைமதி, சந்திரன், மதிவதனன், அஷ்ரபா நூர்டீன் போன்றோரும், நிலா வெளியில் நிலவின்தாசன், நிலாதமிழின்தாசன், நிலா கேசயன், நிலஊர்சித்திரவேல், நிலாவெளியூர் கெஜதர் மா போன்றோரும் கிண்ணியாவில் சசிகலா ஏ. எம். எம். அலி, அமிர் அலி போன்றோரும். மூதூர்ப் பகுதியில் முகைதீன், புண்ணியமூர்த்தி, கனகசிங்கம், செல்லக்குட்டி, ஆலங்கேணி கௌரிதாசன், ஈச்சையூர்த்தவா போன்றோரும். இடையிடையே எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் அ. கௌரிதாசன், நிலாதமிழின் தாசன், அஷ்ரபா நூர்டீன், ஏ. எம். எம் அலி, எம். அமிர் அலி, ஆகியோர் சிலகாலம் சிந்தாமணிக் கவிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகக் கொடி கட்டிப் பறந்தவர்கள். நிலா தமிழின் தாசனின் குறுங்காவியம் ஒன்று ''தொண்டனில்'' தொடராக வந்தது.

கலண்டர் கவிஞர்கள் என முன்னே வகைப்படுத்தப்பட்டவர்கள் தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, பாலன்பிறப்பு, நபி பிறப்பு, நாயன்மார் குருபூசை, பெரியார் நினைவுதின விழாக்கள், விசேட மலர் வெளியீடுகள், என்று இவ்வாறு வரும் விசேட வருடாந்த தினங்களையொட்டி ஏதாவது எழுதி வாசித்து தமது பங்களிப்புக்களைக் காட்டி ''கவிஞர்'' என்ற பெயரில் நாமப் பட்டை துருப்பிடிக்காமல் பாதுகாத்து வருகின்றனர்.

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொள்ளாத போதும் பணிபுரிதற் பொருட்டுப் பல்வேறு இடங்களிலிருந்தும், இங்கு வந்த பிறவூர்க் கவிஞர்களும், தங்கள் சேவைக் காலத்தில் திருமலையில் கவிதை வளர்ச்சிக்கும், கவித்துவ எழுச்சிக்கும், தமது பங்களிப்பை அளித்தார்கள் என்பதும் மறப்பதற்கில்லை நல்லை அமிழ்தன், தில்லை முகிலன், புதுவை இரத்தினதுரை, போன்ற பலர் சங்கப் பலகை நிகழ்ச்சிகளையும் கவியரங்குகள் பலவற்றையும், மாதாந்தம் நடாத்தியதோடு சஞ்சிகை வளர்ச்சிகளுக்கும், பங்களிப்புச் செய்து நமது மண்ணின் கவிஞர்களுக்கு ஊக்கம் கொடுத்தவர்கள். கே. கே. மதிவதனன் வெளியிட்ட ''மலைத்தேன்'' மலரில் இவர்களது படைப்புக்களைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வளர்ச்சி பெற்று வந்த கவிதை வளத்தில் எண்பதுகளில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் கவிஞர் மனதில் ஏற்பட்ட ஏக்கம், எதைப் பாடுவது? ஏது களம்?. என்ற நினைப்பாக அழகியலைப் பாடலில் கொண்டிருந்தால் அதனை வரவேற்கும் நிலையில் சமுதாயம் இருக்கவில்லை. சமுதாயம் முகம் கொடுத்திருக்கும் அன்றாடம் பிரச்சனையை மையமாகக் கிப் பாட நினைத்தால் கூண்டுக் கம்பிகள் குறுக்கே தோன்றி எச்சரிக்கும். எனவே தான் எண்பதுகளில் தொடங்கிய இந்த ''ஒதுங்கல்'' அல்லது 'பதுங்கல்' கவிதை வளர்ச்சியில் பெரும் தடங்கலை ஏற்படுத்தியது. இந்தக் கால கட்டத்தில் தான் எண்பதின் பிற்பகுதிகளில் கல்லூரி மாணவனாயிருந்த ஒரு இளங்கன்று நாட்டின் பல்வேறு பிரச்சனைகளைக் கண்டு வயதுக்கேற்ற வேகங்கொண்டு தணியாத தாகம் கொண்டு அவற்றைப் புதுக்கவிதைப் படிமங்கள் வாயிலாக பாடப் புறப்பட்டான். அவன் தான் மைக்கல் கொலின். 'தாகம்' கலை இலக்கிய வட்டம் அமைத்து ''தாகம்'' பெயரில் சஞ்சிகை தொகுத்துத் தன் கவிதைக்கும் பிறர் கவிதைக்கும் களம் அமைத்தவர். தினகரன் ''கவிதைச் சோலை'' ''கவிதா சாகரம்'' ஆகியவற்றை அன்றிலிருந்து இன்றும் அலங்கரித்து வருகின்றது இவர் கவிதைகள். இவரது துணிச்சலாலும், இடைவிடா முயற்சியாலும் இளம் வயதிலேயே ''என் பிரிய இராஜகுமாரிக்கு'' என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட வாய்ப்புக் கிடைத்தது.

நாட்டுச் சூழ்நிலையைச் சாட்டுக் கூறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே தொடர்ந்து பழங்கவிஞர்கள் தூங்கிக் கொண்டிருப்பதையும், திருமலைக் கவிதை வளர்ச்சி தேங்கிக் கொண்டிருப்பதையும் கவிதையுலகு தாங்கிக் கொண்டிருக்காது, உடன் ஆவன செய்ய வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறது.

மாவட்ட ரீதியான கவிஞர் ஒன்றியம் அமைக்கப்பட வேண்டும். மாதாந்தக் கலந்துரையாடல்கள், கவியரங்குகள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். பிரசுர களங்கள் அமைத்துக் கவிஞர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். கவிதைத் தொகுப்புக்கள் அச்சிட்டு வெளியிட்டு ''சந்தைப் படுத்தும்'' சந்தாகாரர் திரட்டப்பட வேண்டும். இவ்வாறு செயற்படுவதன் மூலம் திருக்கோணமலையிலிருந்து வற்றாத வளம் மிக்க கவிதையாறு ஊற்றெடுத்து ஊர்கள் தோறும் ஓயாது ஓடவிடலாம். இதற்கு நற்றமிழ்பற்று வைத்த கவிஞர்களும் கலைஞர்களும் ஒற்றுமையாகப் பாடுபடுவார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93 இல்

கலை

இலக்கிய

ஆய்வு

'திருக்கோணமலை

மாவட்ட

நாட்டாரிலக்கியம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வளர்ந்து வரும் துறைகளில் நாட்டார் பாடலும் ஒன்றாகும். மொழித்துறையின் பகுதியாகச் செயற்பட்ட நாட்டார் பாடல்கள் இன்று தனி ஒரு கலையாக வளர்ந்துள்ளது. இத்துறையானது மானிடவியல், சமூகவியல், தத்துவம், வரலாறு, ஆகிய துறைகளோடு இரண்டறக் கலந்துள்ளது.

இப்பாடல்களின் சிருஷ்டிகர்த்தா இம் மண்ணின் மக்கள் - பழங்காலப் பாட்டின் எச்சமாகிய நாட்டார் பாடல்கள் மக்களின் உள்ளத்தில் கருக்கொண்டு உணர்ச்சி வெளிப்பாடாக உருவானதாகும். சமுதாய வளர்ச்சியினைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாக நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன.

வாய் வழியாகப் பிறந்து மனதுக்கும் செவிக்கும் இன்பமூட்டுகின்ற இப்பாடல்கள் யாரால்? எப்போது பாடப்பட்டது? என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ள போதிலும், பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களிடையே வாய்மொழி இலக்கியமாக வழங்கி வரும் இப்பாடல்கள் 16ம் நூற்றாண்டில் மேலை நாட்டில் அச்சு வாகன மேறியது.

இயல்பாக இயற்கையோடு இணைந்து உணர்ச்சிகளை ஊட்டி மக்களைக் களிப்படையச் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையாகிய நாட்டார் பாடல்கள் மனித உணர்வுக்கு வடிகாலாக அமைந்துள்ளது.

கிராமிய மக்களின் ஜீவ ஊற்றாகிய நாட்டார் பாடல்கள் வளமிக்க எம்முடைய பாரம்பரிய பண்பாடுகளை விளக்கவல்லதாகும்.

இத்தகைய நாட்டார் பாடல்கள் படிப்பு வாசனையற்ற கிராமிய மக்கள் பாடியவைகள் தான் என்ற கருத்தை முற்றும் முழுதாக எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இல்லை. காரணம் நாட்டுப் பாடல்கள் ஏட்டுப் பிரதிகளாகவும் இருந்திருக்கின்றன.

தமிழ் கூறும் நல்லுலகில் பல பிராந்தியத்து நாட்டுப் பாடல்களையும் படிக்கும் போது அதனைப் பாடியவர்களுக்கு, கல்வி அறிவு இருந்திருக்கிறது என நாம் துலாம்பரமாகக் காணமுடியும். ஏட்டிலே பாடல்களை எழுதி வைத்தோர் நிச்சயமாக படிப்பறிவற்ற பாமரமக்களாக இருக்க முடியாது.

இந்த நோக்கோடுதான் நான் நாட்டுப் பாடல்களை நோக்குகிறேன். நாட்டுப் பாடல்களின் எதுகை, மோனை, சீர், தளை இவைகளைப் பார்க்கும் போது பாடியவர்களுக்கு கவிதையைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்திருந்ததோடு, அவர்களுக்குக் கவித்துவம் இருந்தது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

நம் நாட்டில் நாட்டார் பாடல்களைத் தேடித் தொகுக்கும் முயற்சி 1950ஆம் ஆண்டிற்குப் பின்னரே முனைப்படைந்து பல பிரதேசத்து நாட்டார் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ள போதிலும் திருகோணமலை மாவட்டத்தின் நாட்டார் பாடல்களைச் சேகரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியில் ஒருவருமே முன் வராதிருக்கின்றனர். அமைதியற்ற இச் சூழ்நிலையில் என்னால் சேகரிக்கப்பட்ட பாடல்களை உங்கள் முன் வைத்துள்ளேன்.

எனது சனனபதியான மூதூர் பிரதேசத்திலும் குட்டிக்காளி காவியம், கங்கைக் காவியம், குறுஞ்சாமுனைக்காவியம் ஆகிய தொடர் நிலைச் செய்யுட்களாகச் சில இருந்தன. எமது முதியோர்கள் அவைகளைப் பாடியதை நான் கேட்டிருக்கிறேன், அவைகள் என்றுமே அச்சில் வெளிவரவில்லை. இன்றைய நிலையில் அவை வாய்மொழி இலக்கியமாகவே அமைந்திருப்பதால் அவையும் நாட்டுப் பாடல்களே.

முதலில் குட்டிக்காளி காவியத்தை எடுத்துக் கொள்வோம். சம்பூர் வாசியான குட்டிக்காளி என்பவன் தன் இன பந்துக்கள் வதியும் ஊரான கிளிவெட்டியில் மணம் முடிக்கிறான் அங்கேயே மனைவியுடனும் பிள்ளைகளுடனும் வாழ்கிறான். குடும்பத்தில் ஏதோ தகராறு. சம்பூருக்கு வந்த குட்டிக்காளி துவக்கோடு கிளிவெட்டிக்குச் சென்று மனைவி, பிள்ளைகள், மாமனார் ஆகியோரைச் சுட்டுக் கொல்கிறான். வழமையான விசாரணை நடக்கிறது; வழக்கு விசாரணை நடந்து குற்றவாளியாகிக் கொலைத்தீர்ப்படைகிறான்.

இந்தச் சம்பவம் 19ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் நடைபெற்றது. இதனை யாரோ ஒருவர் காவியமாகப் பாடியிருக்கிறார். அவர் கிளிவெட்டியில் இருந்த யாழ்ப்பாணத்து ஆசிரியர் எனச் சிலர் சொல்கிறார்கள். சரியாகத் தெரியவில்லை எவருக்கும். ஆனாற் காவியத்தின் பாடல்கள் முதியோர் சிலருக்குத் தெரிந்திருக்கிறது. அக் காவியத்தின் முதற் பாடல்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போம். முதலாம் பாடல், கொட்டியாபுரப்பற்றின் எல்லைகளைச் சொல்வதாக அமைந்துள்ளது அந்தப் பாடல்,

திருமருவு கோணமலை வடசார்பிலாக
செய்யவொரு வாரிதிரை கீழ்சார்பிலாக
வெருகல் எனும் அழகு நதி தென்சர்ர்பிலாக
குருக்கள் எனும் வளநதியும் மேல் சார்பிலாக

ஆன இந்நான் கெல்லை அமைவாகவுள்ள
அகமிகவு மகிழ்வு தரும் செந்நெல்வினை கழனி
தேனொழுகு மலர்காவின் செழுமை மாறாத
திகழ் கொட்டியார் என்னத் திருநிறையும் நாடு

இவ்வளமையுறுங் கொட்டியாபுரப்பற்றில்
எழில் பெருக வேளாளர் வதிகின்ற ஊராம்
செவ்வை செறி சம்பூர்க் குறிச்சியிற் பிறந்த
சித்திராவி பெருந்தகையுடையாளின் மைந்தன்.

இப்படியாகத் தொடங்கும் குட்டிக்காளிக் காவியம் காவிய நாயகனை-

''பொருந்து குட்டிக்காளி என்னும் நாமத்தான்
பேர் விளங்கத் தக்க திறல் காத்தவீரன்''

என ஒரு வீரனாகவே வர்ணிக்கிறது. இந்தக் காவியத்தைப் பாடியவர் குட்டிக்காளியின் மேல் அன்பும் அனுதாபமும் உள்ளவராகவே இருந்திருக்க வேண்டும்.

ஆனாற் பாடியவரே தெரியாத இக் காவியம் இன்று கொட்டியாபுரப்பற்று மக்களிடையே வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி இலக்கியமாகவே பயிலப்படுகின்றது. அக் காவியம் முழுவதையும் தேடிப்பிடித்து வெளிக்கொணர இனிமேற்தான் யாராவது முயல வேண்டும்.

மூதூர் முஸ்லிம் புலவரான சாலையர் என்பவரால் பாடப்பட்டது கங்கைக் காவியம்.

மகாவலி கங்கை மூதூருக்கு வளத்தையும் வனப்பையும் தருகின்றது. இன்னமும் தந்து கொண்டிருக்கிறது அக்கங்கையானது ஓடி வளைந்து திரும்பும் இடங்களில் எல்லாம் வெண்மணலைக் கொட்டிப் பரவியிருக்கும். அம் மணற்றிட்டுக்களைத் ''தெத்தி'' என வழங்குவார்கள். அம் மணற்றிட்டுக்களில் கூடி உல்லாசமாகச் சாப்பிடுவது இவ்வூர் மக்களுக்கு ஒரு பொழுது போக்கு. அப்பொழுது போக்குத்தான் காவியமாக்கப்பட்டிருக்கின்றது.

சீராறு மகாவலி கங்கை வியப்பும்
தெத்திகள் அமைந்திடும் விஸ்தாரவிதமும்
நேரான காவியம் நாவாலிசைக்க
நித்தனே என் நாவில் சித்தி தருவாயே.

என்ற காப்புடன் தொடங்கும் இக் காவியம்:-

மத்தகரி ஒத்த முஸ்லிம்கள் திடவான்
மாடாடு கோழி பல காய்கறிகள் சம்பா
உத்தம குணத்தோடு விருந்தாடல் செய்யும்
உயர் பெரிய வம்மியடி மணல் மேடுதானே.

தானவன் கிருபை உறுமானே நீகேளாய்
சாந்தமுறு வெண் நாவல் சேந்திடும் தெத்தி
தேனொழுகு சோலைசெறி புளியடித் தெத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியே சேம்மையா ? தெரிகிறது பாராய்

இப்படியாகக் கங்கைக் கரையோரமாக நடந்து பல தெத்திகளையும் தன் காதலிக்குக் காட்டிக் கொண்டு போவதாக செல்லுகின்றது இவ் வழி நடைக் காவியம்.

முப்பதுக்கு மேற்பட்ட கண்ணிகளையுடையதாக அமைந்துள்ளது. அதிர்ஷ்டவசமாக இக்காவியம் முழுமையும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதனை அச்சு வாகனமேற்ற வேண்டியது நம் கடமை.

இக் கங்கைக் காவியம் போலவே தோப்பூரைச் சேர்ந்த கும்பத்தம்பிப் புலவர் குறுஞ்சாமுனைக் காவியம் எழுதியுள்ளார். தோப்பூருக்குப் பக்கத்திலுள்ள அல்லைக் குளமும். அக் குளம் சார்ந்த மருத நிலப் பகுதியும் விபரிக்கப்படுகிறது காவியத்தில். அக் குளக் கரைக்குப் பக்கத்தில் விருந்தயரும் சம்பவமே காவியப் பொருள்.

மலரழகு வசனமலர் இதழ்பிரிய
முடிவதனில் வருவதனை முடுகியே கண்டு
பலவிதம் தானவரி வண்டு மது உண்டு
பல நாளுமே சென்ற சிலராக பாடும்

அலறுமிது குளமதனை அரசரிது நாளில்
அல்லையெனவென்று சில் கல்லனை தொடுத்து
பலருமிகு உபயோகமாக அக்குளமதைப்
பாதாளமாக்கி வெகு நீரானதை நிறுத்தி

என்பன போன்ற சுவை மிகுந்த நாற்பது பாடல்களால் இக் காவியம் அமைந்துள்ளது. இக் காவியமும் தற்போது வாய் மொழியாகவே வழங்கிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தொடர் நிலைச் செய்யுட்களை விட்டால் மூதூரில் நாட்டார் பாடலாக நமக்குக் கிடைப்பது வத்தைக் காரரின் ''அம்பா'' பாடல்களாகும்.

வத்தை என்றால் 1947ல் முன்னர் மூதூருக்கும் திருகோணமலைக்கும் இடையில் முக்கிய போக்கு வரத்துச் சாதனமாக அமைந்தவையாகும். அவைகள் மீன்பிடித் தோணிகளைப்போல சிறியவையுமல்ல, பாய்க்கப்பல்களைப் போல பெரியவையுமல்ல. முப்பது நாற்பது அடி நீளத்தின் வங்குகள் என்ற மரத்தூண் களில் பலகைகளைப் பொருத்திச் செய்த மரக் கலங்கள் இவை.

காற்றிலே பாய் விரித்து ஓடும். காற்றே அசை யாத பங்குனி, சித்திரை மாதங்களில் சுமார் பன்னி ரெண்டு பேர் சேர்ந்து துடுப்புக்களால் வலித்து வத் தையை ஓட்டிச் செல்வர். சிலவேளை மூதூரிலிருந்து திருக்கோணமலை துறைமுகத்துக்குத் துடுப்பு வலித்தே வரவேண்டியிருக்கும். இந்த எட்டுமைல் தூரத்தையும் தண்டு வலித்து அங்குலம் அங்குலமாக முன்னேறுவதன் அலுப்பும் களைப்பும் தோன்றாமலிருக்க வத்தைக் காரர்கள் அம்பா பாடுவார்கள். அந்த அம்பாப் பாடல் களை நோக்குவோம்.

1. ஆண்டவனே ஏலேலோ உன்னை நம்பி
அரிய கடல் ஏலேலோ ஏறிவிட்டோம்

2. படைச்சவனே ஏலேலோ உன்னை நம்பி
படு மரத்தில் ஏலேலோ ஏறிவிட்டோம்

3. வாடை நல்லா ஏலேலோ வீசுதடி
வங்கக் கடல் ஏலேலோ குமுறுதடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கச்சான் நல்லா ஏலேலோ காத்தடிக்கு
கடல் பொங்கி ஏலேலோ குமுறுதடி

இப்படியே துடுப்பு வலித்துக் கொண்டு வருகை யில் வத்தைக்காரன் ஒருவன் சோர்ந்தே போகிறான். அவனுக்குக் களைப்பும் ஆயாசமும் மேலிட வாழ்க் கையே வெறுக்கிறது. அவன் பாடுகிறான்-

5. வட்ட வட்ட ஏலேலோ பலகை நாக்காம்
வாணல் எல்லாம் ஏலேலோ போக்குதடி

இவ்வடிகளில் துடுப்பலகை நாக்கு துடுப்புக்களின் நுனியில் அரசிலை போல தோன்றும் பலகையிலான துடுப்புக்களாகும். அதைப் பலகை நாக்கு என்றே சொல்லுவார்கள் அடுத்த அடியில் வரும் வாணல் ''வாழ்நாள்'' என்பதன் சிதைந்த வழக்காகும்.

இப்படியாக ஒருவன் வாழ்க்கையை வெறுத்துப் பாடுகையில் இன்னொருவனுக்கு பழம் பெருமைமிக்க திருக்கோணமலையும், அதன் பெருமைக்குக் காரண மான கோணேசரும் ஞாபகத்துக்கு வருகின்றது. அவன் பாடுகின்றான்.

6. நாலுபக்கம் ஏலேலோ நாலுமலை
நடுவ திரு ஏலேலோ கோணமலை

7. கோண நல்ல ஏலேலோ மலைச்சிபெற்ற
கோபுரத்தை ஏலேலோ யரிடிச்சார்

இன்று எம்மிடையே வத்தைகளும் இல்லை அம்பாப் பாடுபவரும் இல்லை. ஆனாலும் இந்த அம்பாப் பாடல்கள் பலருக்குத் தெரியும் அவைகளைத் தொகுக்க வேண்டியதும் நம்மவரது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரின் மத்தியிலே மிகச் சிறுபான்மையினராக கத்தோலிக்க மக்கள் சிலர் இருக்கின்றார்கள். கொட்டியாபுரத்து வன்னியன் ஒருவன் அரசுரிமைப் போராட்டத்தில் தோல்வி கண்டு தூத்துக்குடிக்கு ஓடினான். அங்கிருந்து கிருஸ்தவர்களான மீன்பிடிப் பரதவர்களைச் சேர்த்துக் கொண்டு இங்கு மீண்டும் வந்து ஆட்சியைக் கைப்பற்றினான் என்று அருட்திரு டொமினிக்சாமிநாதன் அவர்கள் சமீபத்தில் ''வெட்டாப்பு'' என்ற பத்திரிகையில் எழுதியுள்ளார்.

17ஆம் நூற்றாண்டிலிருந்தே இங்கு வாழ்ந்து வரும் கத்தோலிக்க மக்களிடம் பல்வேறு பாடல்கள் நாட்டார் இலக்கியமாக உண்டு. ஒரு தாலாட்டுப் பாடலைப் பார்ப்போம்-

ஒரு தாய் தன் அருமை மகனைத் தொட்டிலில் இட்டுத் தலாட்டுகிறாள். அம்மைந்தன் அவள் அருந்தவமிருந்து பல நேர்த்திகள் வைத்துப் பிறந்தவன். அவன் நல்லபடியாக வளர வேண்டும் என்று மரியன்னையை வேண்டுகிறாள்-

நான் மலைக்கு மலை நேர்ந்தேன்
மலை உயரக் பொன் நேர்ந்தேன்
மாதா இரங்கி - மாதா மனமிரங்கித் தந்தபிச்சை
தந்த பிச்சை ஈடேற
தயவு பண்ணும் தாய் மரியே
கொடுத்த பிச்சை ஈடேறக்
கூட நில்லும் தாய் மரியே.

இன்னொரு தாய் தன் பெண்குழந்தையைத் தாலாட்டுகிறாள். அப் பெண்ணுக்குத் தன் அன்னையிடம் ஏதோ மனத்தாங்கல் அம் மனத்தாங்கலைத் தன் தாலாட்டில் வெளிப்படுத்துகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ அம்மான் வயலுக்கு
அவலுக்கு நெல் அள்ளப் போய்
அம்மான் பெட்டி பறிச் செறிஞ்சு
உன்னைப் போ பிள்ளை என்றோ
நீ அழுது விம்மி ஓடி வந்து
அப்பரிடம் சொல்லி அழ
அப்பர் காசால் அவலிடித்து
உன் கவலை எல்லாம் தீர்த்தாரோ
பொன்னால் சுவரிடித்து
உன் பொருமல் எல்லாம் தீர்த்தாரே

இப்படியான தாலாட்டுப் பாடல்கள் பழைய கிழவிகளிடம் தாராளமாக உண்டு. இன்றைய தலை முறையினருக்கு இவை தெரியாது இன்றைய தலை முறையினர்-

எந்தன் பச்சைக்கிளிக் கொரு செவ்வந்திப் பூவை
தொட்டிலைக் கட்டிவைத்தேன் - அந்த
பட்டுச் சிறகுடன் அன்னச் சிறகினை
மெல்லென இட்டு வைத்தேன்.

என்று சினிமாப் பாட்டுப் பாடித் தாலாட்டு பவர்களாயிற்றே இந்த நிலையில் நம் பழைய தாலாட்டுப் பாடல்களைத் தொகுக்க வேண்டியது மிக அவசியமாகின்றது இத் தாலாட்டுப் பாடல்கள் முஸ்லிம்களிடேயும் உண்டு.

கொட்டியாபுரப்பற்றில் பள்ளிக்குடியிருப்பு என்ற கிராமம் உண்டு. அங்கே கொம்பு விளையாட்டு இன்னமும் நடைபெறுகின்றது. அங்கு மட்டுந்தான் கொட்டியாபுரப்பற்றிலேயே கொம்பு விளையாட்டு நடைபெறுகிறது. அந்தக் கொம்பு பாடற் பாட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே நாட்டார் பாடல்கள் என்ற பாட நூலிலே வெளிவந்திருப்பதால் நான் இங்கு அதனைக் குறிப்பிட விரும்பவில்லை.

கொட்டியாபுரத்து மக்களதும், திருகோணமலை வட்டாரத்து ஏனைய பற்றுக்களின் மாந்தரதும் முக்கிய ஜீவனோபாயம் விவசாயமே. மாடு அவர்களுக்கு மிக மேலான சொத்து. வயல் உழவும் சேறுமிதிக்கவும், சூடு அடிக்கவும் மாட்டையே அவர்கள் பயன்படுத்துவர், வயல் மிதிக்கையில் அவர்கள் பாடும்போது-

வரம்போ தலைகாணி - உனக்கு
வாய்க்காலோ பஞ்சு மெத்தை
ஓடிநட செல்லா - உன்
உறுதியுள்ள காலாலே
செல்லன் சாரை அறிவாணடா - அவன்
சார் தவறிப் போகாண்டா
மூலை வரம்போரம் - நீ
இந்த நடை நடந்தா
எப்பகரை சேருவம் நாம்

ஒப்பாரிப் பாடல்களிலும் இப்பிராந்தியத்திற் கென்றே சொந்தமான சில பாடல்களும் உண்டு. ஓர் தடவை நான் என் தமிழ் நண்பர் ஒருவரின் சாவீட்டிற்குச் சென்றிருந்தேன். அவன் தாயின் சம்மதமின்றிக் காதற் திருமணம் முடித்தவன். அவன் சடுதியாக இறந்து போனான். நான் சென்ற நேரத்தில் அவனது தாய் புலம்பினாள்-

நான்சூதில் இழந்துவிட்டேன் - உன்னைச்
சூதாடிக் தோற்றுவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் அந்தத் தாயானவள் என்னென்னமோ சொல்லி அழுதாள். அவளது ஒப்பாரிப் பாடல்களைப் போன்ற பாட்டை நான் வேறு எந்த ஒப்பாரியிலும் காணவில்லை! இந்த ஒப்பாரிப் பாடல்களையும் தேடிப் பிடித்துத் தொகுக்க வேண்டும்.

முடிபாக, வெருகல் தொடக்கம் தென்னை மரவடி முடியவுள்ள இப் பரந்த பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று இக்கட்டுரைக்கான பாடல் களைத் தொகுக்க எனக்கு நேரம் இருக்கவில்லை. சில இடங்களுக்குப் போகவும் முடியவில்லை.

எனவே, இப்பிராந்திய நாட்டார் பாடல்களைத் தேடிக் கொணரும் ஆரம்ப முயற்சியாகவும், அறிமுக வுரையாகவுமே இக் கட்டுரை அமைந்து விட்டது. இலக்கிய அன்பர்களுக்கு திருகோணமலைப் பிராந்திய நாட்டுப் பாடல்களைத் தொகுக்க வேண்டும் என்ற ஆசையைத் தோற்றுவித்தால் அதுவே இன்றைக்குப் போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93 இல்

கலை
இலக்கிய
ஆய்வு

திருக்கோணமலை
பிரதேச
நாடக ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை, பிரதேசம், கலை ஆக்கங்களின் பரிமலர்ச்சியில் நீண்டதொரு பாரம்பரியத்தையும் பெருமைச் சிறப்புக்களையும் கொண்டிருக்கிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணமலைப் பிரதேசத்தின் கலை வளர்ச்சியில் ஒரு பகுதியாக விளங்கும் நாடகக் கலை ஆய்வு பற்றி ஆராயப் புகின். ஒன்றரை நூற்றாண்டுக்கு முந்திய சான்றுகள் பதிவு ரூபத்தில் பெறுவது சிரமமான காரியமாகவுள்ளது. இருந்தும், கிடைக்கும் வாய்மூலச், சான்றுகள் பதிவுச் சான்றுகள் சேகரித்த விபரங்கள், எனது நேரடி அனுபவங்கள் என்பவற்றின் தொகுப்பின் பெறுபேறாக இவ்வாய்ப்பினைச் சமர்ப்பிக்கிறேன்.

நாடகம் என்பது, மேலைத்தேய பரிமாணங்களின் அடிப்படையைக் கொண்டதும், நமது தேசியக் கலைகளில் ஒன்றான 'கூத்து' மரபின் நவீன தோற்றமும் ஆகும் எனக் கொள்ளுமிடத்து, அந்நியரின் வருகை, தற்போது நாம் காணும் நாடக மரபை பரிமளிக்கத் துணையாக இருந்துள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்வது பொருத்தமானதாகும்.

திருக்கோணமலைப் பிரதேசத்தில், கூத்து மரபினைப் பேணிக் காத்து பல்வேறு விதத்தில் சுயமாகவும் கூட்டாகவும் பல்வேறு முன்னோடிகள் காலத்திற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளார்கள் என்ப தை. நம் மூதாதையர் வழிவந்த உரையாடல் தொடர் புகள் மூலம் அறியக் கிடைக்கும் அதேவேளை, ஒன்றரை நூற்றாண்டுக்கு முந்திய பல நிகழ்வுகள் ஆவணப்படுத் தப்பட்டு வைக்கப்பட்டிருக்காததன் காரணமாக அவந் றிற்கான சான்றுகள், ஆதாரங்கள் சமர்ப்பிப்பது இடை யூறாக இருக்கிறது.

எமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி, திருக் கோணமலை தந்த அறிஞர்களான காலஞ்சென்ற வே. அகிலேசபிள்ளை (1853-1910) திருக்கோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை (1863-1922) அண்ணாவியார் வயிரமுத்து தம்பிமுத்து (1900-1960) பெரியகடை எம். சி. அந்தோனிப்பிள்ளை (1890 - 1960) தம்பல கமம் அண்ணாவியார் கணபதிப்பிள்ளை (1900-1935) வேலன் சின்னையா அண்ணாவியார் (1906-1956) மூதூர் அந்தோணிதுரம் (சந்தனம் அண்ணாவியார் சந்தியாப்பிள்ளை அண்ணாவியார், தம்பியையா தம்பி முத்து (1914-1985) கலைத்தந்தை சி. விஸ்வலிங் கம் (1928-1993) ஆகியோருடன், இன்றும் நம்மிடையே வாழ்ந்து கலைப்பணி ஆற்றிக் கொண்டிருக்கும், பெரிய கடை வி. சாந்தமுத்து, நோபட் ஒக்கஸ் சுவாமியார். கலைவேந்தன் த. அமரசிங்கம், கே. கே. மதிவதனன், பி. றோச் அருளப்பு, எஸ் மயில்வாகனம், சின்னையா ஜேசுதாஸன், சின்னையா ஜோசப், சாம்பல்தீவு வீயோ குடும்பத்தினர், நிலாவெளி எஸ். இராசரட்னம், செல் வநாயகபுரம் கலைத்தாஸன் சின்னத்தம்பி, திரு. எஸ். பற்குணம், பாலசுகுமார், போன்றோர் திருக்கோணம லைப் பிரதேச நாடக வளர்ச்சிக்கு தம்மாலான பங்களிப் புகளைச் செய்துள்ளனர், இன்றும் செய்து வருகின்றனர்.

திருக்கோணமலைப் பிரதேசத்தில், இலங்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாடகப் பிரதி "கண்டியரசன் நாடகம்" ஆகும். அறிஞர் வே. அகிலேசபிள்ளை என்பவரால் எழுதப் பட்ட இது, நாடகம் என்ற தலைப்பில் இருந்தபோதி லும், அக்கால தேவைக்கேற்ப - அப்போதய நடை முறைக்கேற்ப கூத்து வடிவிலேயே இதன் பிரதி அமைந் துள்ளது. 1887இல் எழுதப்பட்ட கண்டியரசன் நாடகம் இப்பிரதேசத்தின் கிராமப் புறங்களிலும் வெளிப் பிர தேசங்களிலும் பல தடவைகளில் கூத்தாக ஆடப்பட் டுள்ளது. இதுநாள் வரை இந்த நாடகம் அச்சு வாகனம் ஏறாது எழுத்துப் பிரதியாகவே இன்றும் இருப்பது கலை வளர்ச்சியில் ஆர்வம் கொண்டோரின் கவலைக் குரிய ஒன்றாகும்.

1992இல் கண்டி நகரில் இந்து கலாசார அமைச் சினால் மேற்கொள்ளப்பட்ட சாகித்திய விழாவின் ஒரு பகுதியாக ஒழுங்கு பண்ணப்பட்டிருந்த நூற்கண் காட்சியில் இந்த "கண்டியரசன் நாடக" புகைப் படப் பிரதி திருக்கோணமலை நகராட்சி மன்றப் பொதுநூலகப் பிரிவினரால் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1930இல் மீண்டும் பலதடவை இந்த கண்டியரசன் நாடகம் கலைஞர் வைரமுத்து தம்பிமுத்து என்பவரால் மேடையேற்றப்பட்டுள்ளது.

முன் குறிப்பிட்டுள்ள கலைஞர், அண்ணாவியார் வ. தம்பிமுத்து திருக்கோணமலைப் பிரதேச நாடக வரலாற்றில் காத்திரமான ஒரு இடத்தை வகிப்பவ ராவர். ஒரு நாடகம், அரங்கேறுவதற்குத் முக்கிய அம்சங்களாகத் தேவைப்படும் பிரதியாக்கம், நடிப்பு, பாட்டுக் கட்டல், பாடுதல், ஒப்பனை, காட்சி சோட னைகள் போன்ற இன்னோரன்ன விடயங்களில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலக் கலைஞர்கள் ஏதாவது ஒன்றிரண்டு விடயங்களில் மட்டும் தமது திறமையைக் காட்டத் தயாராக இருக்கும் அதேவேளை ஏனைய விடயங்களுக்குப் பிறர் தயவை எதிர்பார்க்கும் நிலையை நாம் நன்குணர்வோம்.

கலைஞர் வ. தம்பிமுத்து அவர்கள் தமிழ்நாட்டில் சிலகாலம் வாழ்ந்திருக்கச் சந்தர்ப்பம் பெற்றிருந்த காரணத்தினால், நாடகக்கலைக்குத் தேவையான அத்தனை அம்சங்களிலும் பாண்டித்தியம் பெற்றவராக திருக்கோணமலைக்குத் திரும்பி வந்தது முதல் முழுமூச்சாக கூத்துக்களை. நாடகங்களை மேடையேற்ற முன்னின்றிருக்கிறார். அவரது முதல் நாடகமாக முன் கூறிப்பிட்ட ''கண்டியரசன் நாடகம்'' மேடையேற்றப் பட்டபோது, கண்டிராசாவாக மேடையில் கலக்கியவர் தொடர்ந்து, குலேபகாவலி, வள்ளி திருமணம், தூக்குத்தூக்கி, அல்லி அர்ச்சுனா, கோவலன் சரித்திரம் சுபத்திரா, லலிதாங்கி, கிருஸ்ணலீலா, போன்ற நாடகங்களை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் மேடையேற்றிய பெருமைக்குரியவர்.

நாடகங்களை மேடையேற்றுவதற்கு, அவ்வப்போது, தற்காலிகமாக கொட்டகைகள் அமைப்பதில் கலைஞர்கள் படும் சிரமத்தை சுயமாக அனுபவவாயிலாக நன்கு உணர்ந்து கொண்ட தம்பிமுத்து அவர்கள் சுண்டங்காடு என்ற பகுதியில் ''கணேசன் அரங்கு'' என்ற பெயரில் நிரந்தரமாக நாடகக் கொட்டகை ஒன்றை நிறுவியவர்.

இக்கொட்டகை பின்னர் கணேசன் தியேட்டராகி, இன்றும் லக்ஷ்மி தியேட்டராக உள்ளது. மேற்படி கொட்டகையில் நம் நாட்டுக் கலைஞர்களோடு, தமிழ் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்களையும் உள்ளடக்கிய பல நாடகங்கள் மேடையேறியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, இவர் காலத்தவரான தம்பலகமம் கணபதிப்பிள்ளை அண்ணாவியார் அவரது தந்தையார் கந்தப்பு அண்ணாவியாரிடமிருந்து பெற்ற கலையுணர் வுகளின் வெளிப்பாடாக தனது இருபதாவது வயதில் (1920) குசேலர் சரித்திரம் என்ற நாடகத்தை அரங் கேற்றியுள்ளார். தொடர்ந்து இவர், வீரகுமாரன், தமிழ்ச்சிந்தாமணி, சகுந்தலா போன்ற நாடகங்களைப் பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளார்.

ஆரம்ப காலத்தில், ஏனைய பிரதேசங்களைப் போலவே, புராண இதிகாச, வரலாற்று நாடகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மேடையேற்றப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இதற்குக் காரணம், அக்காலப் பகுதியில் அவ்வாறான தேவையே இருந்தது.

பெரியகடைப் பகுதியிலும் நாடகக் கலைக்கென கொட்டகை ஒன்று ''மணித்தியேட்டர்'' என்ற பெய ரில் அமைக்கப்பட்டு பல நாடகங்கள் இந்தியாவிலி ருந்து தருவிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டிருக்கிறது. மணித்தியேட்டர் பின்னர் ''ஜோதித்தியேட்டராகி, அண்மைக்காலத்தில்'' சிஹாரா தியேட்டர் என்று அழைக்கப்படுகிறது.

இதே காலப்பகுதியில் ''மானாங்கேணிச் சந்தியில் (தற்போது தேசிய வீடமைப்புத் திணைக்களம் அமைந் துள்ள பகுதி) வேலன் சின்னையா அண்ணாவியார் கே. சுவாக்கீம்பிள்ளை என்பவரோடு சேர்ந்து பல நாட கங்களை மேடையேற்றியுள்ளார்.

ஏற்கனவே மேடையேற்றப்பட்டிருந்த இன்னாசி முத்து என்பவரால் எழுதப்பட்ட 'ஊசோன் பாலந்தை' என்ற நாடகத்தை மீண்டும் 1922இல் மேடையேற்றி யதன் மூலம் நாடக வட்டத்திற்குள் பிரவேசித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிகடை எம். சி. அந்தோனிப்பிள்ளை, இப்பிரதேச நாடக வளர்ச்சிக்கு பல வகையிலும் துணையாக நின்றுள்ளார். 'மீசைக்கார அந்தோணி' என்று செல்ல மாக அழைக்கப்பட்டவர். தொடர்ந்து இருதய ராஜன், காவலனை வென்ற கற்புக்கரசி, மனச்சாட்சி ஞானசௌந்தரி, என்பன இவரால் மேடையேற்றப் பட்டு புகழ் பெற்றன.

கிறிஸ்துவின் இறப்பு உயிர்ப்பு விழாவினைக் குறித்து நிற்கும் 'பாஸ்கா காலத்தையொட்டி 1949இல் பெரியகடை மாதாங்கோவில் வளவிற்குள், பெரிதாக அமைக்கப்பட்ட மூன்று பெரிய மேடைகளில் மூன்று வித்தியாசமான காட்சிகளை, ரோமாபுரிய உடை அலங்காரங்களுடன் மேடையேற்றி பிரமிக்கச் செய்தவர்

இவரது தந்தையார், தகரக்காரச் செல்லையா என்று அழைக்கப்பட்டவர். தகரத்தில் நுட்பமான வேலைப்பாடுகளுடன் கூடிய, நாடக பாத்திரங்களுக்குத் தேவையான அணிகலன்களைச் செய்வதில் வல்லவரா யிருந்த காரணத்தினாலேயே இவ்வாறு அழைக்கப் பட்டார்.

1943இல் தம்பலகமம் வண்ணார் மேட்டுத் திடலில், சமயம்மன் கோவிலடியில் ''சதி அநுசியா'' நாடகத்தில் பார்வதி அம்மனாக நடித்ததன் மூலம் நாடகத் துறைக்குள் பிரவேசித்தவர் மற்றுமொரு கலை ஞரான தம்பிஐயா தம்பிமுத்து, தொடர்ந்து தூக்குத் தூக்கி, வள்ளி திருமணம் போன்ற நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி வெற்றி கண்டவர். அண்மைக் காலத்தில் அமரன் ஸ்கிறீன் தயாரிப்புகளான குத்துவிளக்கு, சொர்ப்பன வாழ்வு போன்ற நாடகங்கள் வெற்றி பெற பெரிதும் உதவியாக இருந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில், அதாவது 1943 இல் மூதூர்ப் பிரதேசத்தில் வெளிச்சோர் அந்தோணிதுரம் என்பவர் ஞானசௌந்தரி என்னும் கூத்தை அரங்கேற்றியுள்ளார். சந்தனம் அண்ணாவியார் என்றும் அபிமானிகளால் அழைக்கப்பட்ட இவர், விருத்தங்களைப் பெரிய தொனியில் பாடுவதிலும், உடனுக்குடன் பாட்டுக் கட்டுவதிலும் பெயர் பெற்றிருந்தார். செலஸ்தீன் அதிரியான் ஜோஸப், பிலேந்திரன் எஸ்தோ கொரேரா, ஆகியோர் இவருடன் இணைந்து எந்தப் பாத்திரங்களையும் ஏற்று ஆடியவர்களாவர். சந்தனம் அண்ணாவியர் பற்றிய நூல் ஒன்றினை 'அமுது' அச்சகத்தின் மூலம் எழுத்தாளர் ''வ அ'' அவர்கள் 1980இல் வெளிக் கொண்டு வந்ததாகவும், அண்ணாவியாரது மகன் ஜெகராசசிங்கம் கூறுகிறார். ஆயினும் அண்மைக்கால நிகழ்வுகளால் அந்நூல் கைவசம் கிடைக்கவில்லை. அந்நூல் மாத்திரமின்றி, பிரதேச ரீதியான பெறுமதிமிக்க ஆவணங்கள் நூல்கள் காவு கொள்ளப்பட்டமை வேதனைக்குரிய ஒன்றாகும்.

1921இல் தமிழ் நாட்டைச் சேர்ந்த கலைஞர்களான மதார் சாய்பு தன் சகோதரர் கரீம் சாயபு, சின்னையா சாயபு சகிதம் திருக்கோணமலைப் பிரதேசத்திற்கு வருகை தந்து, தம்பலகமம், மூதூர், கிளிவெட்டி போன்ற பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கலைஞர்களையும் சேர்த்து பல நாடகங்களை மேடையேற்றியதாக கட்டுரை ஒன்றில் 'திருமலை நவம்' குறிப்பிட்டுள்ளார்.

பெரியகடை புல்லுத்தோட்டப் பகுதியில (தற்போது செபஸ்தியார்புரம் என்று அழைக்கப்படுகிறது) வலஸ்தி சாந்தமுத்து 1946 இல் 'பொன்னூல் செபமாலை' என்ற நாடகத்தை இராசையா அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியார், துரைச்சாமி அண்ணாவியார் ஆகியோருடன் இணைந்து மேடையேற்றியுள்ளார். செபஸ்தியார் ஆலயத் திருவிழாவின் போது ''செபஸ்தியார் சரித்திரம்' வடமோடி தென்மோடி இரண்டினையும் இணைத்து கூத்துப்பாணியில் பலமுறை அரங்கேற்றியிருக்கிறார். இதன் நாடகப் பிரதி மட்டக்களப்பிலிருந்து பெறப்பட்டதாக இவர் கூறுகிறார்.

இதே போன்று, சாம்பல்தீவு மாங்கனாய் சஞ்சுவானியார் ஆலயத் திருவிழாவின் போது ''சஞ்சுவானியார் நாடகத்தை'' பலமுறை கூத்தாக மேடையேற்றியுள்ளார்.

அக்காலப்பகுதியில்' யாழ்நகரிலிருந்து வருகை தந்த அண்ணாவிமார்கள் இங்கிருந்த அண்ணாவிமாரோடு இணைந்து கூத்துக்கள் பலவற்றை கிராமப் பிரதேசங்களில் மேடையேற்றியுள்ளனர். குறிப்பாக 1910 இல் இணுவிலைச் சேர்ந்த மு. சுப்பையா அண்ணாவியாரின் ''அழகேந்திர விலாசம், கூத்து, கணபதிப் பிள்ளை அண்ணாவியாரின் ''வள்ளி முருகன்'' கூத்து என்பன இங்கு பிரபலம் பெற்றிருந்தது.

திருக்கோணமலைப் பிரதேச நாடகக்கலை பற்றிய ஆய்வில் முக்கிய இடத்தைப் பெறும் மற்றுமொருவர் இவ்வருட ஆரம்பத்தில் நம்மை விட்டுப் பிரிந்த 'அபிநய சிகாமணி' கலைத்தந்தை போன்ற பட்டங்களைப் பெற்றிருந்த சி. விஸ்வலிங்கம் அவர்களாகும்.

**1940 இல் ஒருநாள்.**

பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் பகல் பன்னிரண்டு மணி வெய்யிலில் பப்பாசி மரமொன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகால் கட்டப்பட்ட நிலையில் அழுது வடிந்து கொண்டிருக்கிறான். இத்தனைக்கும் அவன் செய்த குற்றம் என்ன? அடுத்த வளவுப் பையங்களோடு சேர்ந்து முதல்நாள் இரவு ''பவளக்கொடி'' நாடகத்தில் நடித்ததே.

அயலவர் தடுக்க, உறவினர் அழுது ஒப்பாரி வைக்க அந்தப் பையனின் தந்தை சின்னத்துரை தாறுமாறாக விளாசித் தள்ளியிருந்தார். அக்காலப் பகுதியில் கட்டுரையின் முன்பகுதியில் குறிப்பிட்டவாறு, திருக்கோணமலையில் நாடகங்களை மேடையேற்றிக் கொண்டிருந்த கணேசன் தியேட்டர் ஸ்தாபகர் அண்ணாவி தம்பிமுத்துவின் நாடகங்களைத் தவறாது பார்த்து, அந்த நாடக பாத்திரங்களை அப்படியே மனப்பாடம் செய்து அடுத்தடுத்த நாட்களில் அயல் வளவுப் பிள்ளைகளோடு சேர்ந்து நடித்துக் காட்டுவதில் அந்தப் பையனுக்கு அளவு கடந்த ஆர்வம்.

அந்தப் பையன்தான் பின்னால் நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியும் இயக்கியும் புகழ்பெற்ற கலைஞர் சி. விஸ்வலிங்கம் அவர்களாவர். ஆர்மோனியம் சின்னையாபிள்ளை, வைத்தியக் கலாநிதி ஆ. சின்னத்துரை, தியாகி இராஜகோபால் போன்றோரின் தூண்டுதலாலும் உற்சாகம் பெற்ற இவர் மேடையேற்றிய நாடகங்களில் சேரநாட்டு இளவரசி, அமரகவி பாரதியார், தமிழர் பண்பு, ஏன் பிறந்தோம்? யார் குற்றம்? போன்ற நாடகங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் மேடையேற்றப்பட்டதோடு வெளியிடங்களிலும் ரசிகர்களால் பெரிதும் பாராட்டுப் பெற்றவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் தையற் கலைஞராக இருந்த காரணத்தினால், நாடகங்களுக்குத் தேவையான அலங்கார உடைகளை, குறிப்பாக புராண, இதிகாச, சரித்திர நாடகங்களுக்குக்குரிய அணிகளை இவரே தயாரிக்கும் வல்லமை பெற்றிருந்தார்.

சிறைக்காவலராக இலங்கையின் பல பாகங்களில் கடமையாற்றியதனால் சிங்களமொழித் தொடர்பு இவருக்கு சிங்கள மொழி நாடகங்களையும் தயாரிக்க இயக்க, நடிக்க வழிவகுத்தது. 'அபயபுர' காமினி நாட்டிய கலா சபையினரின் ''அசரணய'' இவர் சிங்கள மொழியில் பயிற்றுவித்து அரங்கேறிய முதல் சிங்கள நாடகம், அதேபோல் ''வெரதிமக'' ''சோயுறு பிரேமய'' என்ற இவரால் பயிற்றுவிக்கப்பட்ட சிங்களமொழி நாடகங்கள், கண்டி, கொழும்பு இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் மேடையேற்றப்பட்டதோடு, சிங்கள மொழிப் பத்திரிகைகளால் சிலாகித்தும் எழுதப்பட்டவைகளாகும்.

''தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட பல சிங்கள மொழி நாடகங்கள் தினம் இரு காட்சிகள் வீதம் மூன்று தினங்களுக்கு கொட்டகை நிறைந்தவண்ணம் நடை பெற்றிருக்கிறது. அந்த நிலை தமிழ் நாடகங்களைப் பொறுத்தவரை நடைபெறாது கவலைக்குரியது என்று தனது கட்டுரை ஒன்றில் சி. விஸ்வலிங்கம் குறிப்பிட்டுள்ளார். 'அமரன் ஸ்கிறீன்' அரங்கேற்றிய குத்துவிளக்கு நாடகத்தை முன்னிட்டு 1970ல் த. அமரசிங்கத்தால் வெளியிடப்பட்ட நாடக மலரில் இவரால் எழுதப்பட்ட மேற்படி கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ''தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட பல நடிகைகள் இன்று சிங்கள சினிமாவில் பிரபலம் பெற்றுள்ளார்கள்'' என்று பெருமிதம் கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாவெளி எஸ். இராஜரட்ணம் அடுத்து நம் கவனத்திற்குரியவராகிறார், நிலாவெளி புனித சூசை யப்பர் ஆலயத்தில் திருவிழாக் காலங்களில் இவரது தயாரிப்பால் உருவாகும் நாடகங்கள் அநேகம் கூத்து வடிவில் மேடையேற்றப்பட்டுள்ளன. நாடகப்பிரதி ஆக்கம், நடிப்பு, இசை, அலங்காரச் சோடனை-போன்ற நாடக அரங்கேற்றத்திற்குத் தேவையான இன்னோ ரன்ன திறமைகள் அத்தனையும் ஒருங்கே கைவரப் பெற்றவர்.

நிலாவெளி ஜெயா மன்றத்தின் மூலம் பல உள் ளூர்க் கலைஞர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். ''சத்தியமுத்திரை, எஸ்தாக்கியார், சந்திரமதி அரிச்சந்திரன் மயானகாண்டம்' போன்றவை இவரின் திறமைக்கு எடுத்துக்காட்டுகள். இன்றும் பாடசாலை மாணவர்களின் நாடகங்களுக்கு ஒப்பானை உதவிகள் வழங்குவதன் மூலம் பங்களிப்பைச் செய்து வருபவர்.

பெரியகடை மாதாங்கோவில் உதவிக்குருவாக இருந்த நோபட் ஒக்கஸ் சுவாமியார் அபார கலைத் திறன் மிக்கவர். 1952 இல் 'உடைபடாத முத்திரை' என்ற நாடகத்தை மேடையேற்றியதன் மூலம். கருணை ஜோசப், ஏ. யோன்பிள்ளை, ஜே. அலக்ஸ்சான்டர், பேதுருப்பிள்ளை, தாபி போன்றோரை நாடக உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

1957 இல் மேடையேற்றப்பட்ட ஒரு நாடகத்தில் கட்டிலில் படுத்திருக்கும் அரசனை உயிரோடு எரிக்கும் காட்சியை தத்துரூபமாக யுக்தி முறைகளைக் கையாண்டு ரசிகர்களைத் திணறடித்தவர். பின்னர் மட்டக்களப் பிற்கு மாற்றாகிச் சென்று, 1985இல் மீண்டும் பங்குத் தந்தையாக திருக்கோணமலைக்கு வந்தபின், 1987இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கா நாடகம் ஒன்றை மார்தாங்கோவில் வளவிற்குள் பிரமாண்டமான மேடையமைப்பில் நூற்றுக்கு மேற் பட்ட சிறியவர் பெரியவர்களைக் கொண்டு, நான்கு நாட்கள் தொடர் வரலாறாக புதிய புதிய யுக்தி முறைகளைக் கையாண்டு மேடையேற்றிப் பாராட்டப் பட்டவர்.

நவீன நாடக யுக்திகளைக் கையாள்வதில் வல் லவராக இருந்தார். உதாரணமாக, மேற்படி நாடகத் திற்குரிய வசனங்கள் அனைத்தையும், ஏற்கனவே, மூன்று நான்கு வாரங்களாக இரவு வேளைகளில் ஒத்திகை பார்த்து, முற்றும் முழுவதுமாக நாடாவில் ஒளிப்பதிவு செய்து கொண்டார். பின்னணிக்குத் தேவையான இசையை, நூற்றுக்கு மேற்பட்ட இசைத் தட்டுக்களிருந்து பெற்று பதிவு செய்துகொண்டார். இதன்மூலம் நாடகம் மேடையில் இரவு வேளைகளில் நடிக்கப்பட்ட போது பார்வையாளர்கள் புதிதாக சினிமாக் காட்சி ஒன்றினைப் பார்வையிடுவதான உணர்வைப் பெற்றிருந்தனர். சிலுவை மரணக் காட்சி யொன்றில், சோக இசை, இடி, மின்னல் போன்ற ஓசை களோடு, வெல்டிங் ஓட்டுவதன் மூலம் ஏற்படும் திடீர் திடீர் பிரகாசக் காட்சிகளால் மக்களை மெய் மறக்கச் செய்தவர்.

இறுதிக்கு முன்காட்சி நடைபெற்றுக் கொண்டி ருந்த வேளை, திருமலையை அண்மித்து நடைபெற்ற ஒரு துர்ப்பாக்கிய சம்பவம், அதைத்தொடர்ந்து பர பரப்பு, பதற்றம், ஊரடங்கு அமுல் இவற்றினால் அக்காட்சி தடைபட்டு, பின்னர் இரு வாரங்களுக்கு பிறகு, அதே மேடையமைப்பில் மேடையேற்றி வெற்றி கண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திருமலையின் இரட்டையர்கள்'' என்று வர்ணிக்கப்பட்ட எஸ். இராயப்பு, க. அரியநாயகம் ஆகியோர் தற்போது எம்மத்தியில் இல்லை. இவ்விரு வரும் ஒன்றிணைந்து அன்றையக் காலப்போக்கை அனுசரித்து, சொற்சுவை, பொருட்சுவை மிக்க அடுக்கு நடை வசன அமைப்பில் நாடகங்களை எழுதி மேடை யேற்றியுள்ளனர். பொதுவாக முற்போக்கு எண்ணங் களின் பிரதிபலிப்பு இவர்களது நாடகங்களில் பெரிதும் காணப்பட்டது.

அடுத்து, கே. கே. மதிவதனன், பி. றோச் அருளப்பு ஆகியோர் இணைந்து திருக்கோணமலைப் பிரதேச நாடக வளர்ச்சிக்கு தமது பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கின்றனர். ஆரம்பத்தில் நாமகள் நாடக மன்றத்தின் மூலம் ''மாலா'' போன்ற நாடகங் களையும், திருமலை கலைவட்டம் என்ற அமைப்பின் மூலம் காதலே நீ வாழ்க, உன் கண்ணில் நீர் வழிந் தால் போன்ற நாடகங்களையும் மிகவும் பரபரப்பாக சம்பந்தப்பட்ட விபரங்கள் அடங்கிய மலர் வெளியீடு களுடன் மேடையேற்றிப் பிரபல்யமானவர்கள்.

1970ல் திரைப்பட நடிகர் மேஜர் சுந்தரராஜன் திருமலைக்கு விஜயம் செய்த வேளை யாழ் கலைய ரங்கம் மேடையேற்றிய திருவிளையாடல் நாடகத்தில் பி. றோச் அருளப்பு, கே. கே. மதிவதனன், கே. எஸ், சந்திரலிங்கம் ஆஷா சம்சுதீன் ஆகியோரும் சேர்ந்து நடித்து பாராட்டுப் பெற்றுள்ளனர். கே. கே. மதிவதனன் தமது நாடகங்களுக்குரிய பாடல்களை இயற்றுவதிலும் அதற்கு இசையமைப்பதிலும் வல்லவர். கலைஞர் பி. றோச் அருளப்பு வானொலி நாடகங்களிலும், ரூபவா கினியிலும் நடித்தவர். இவர்கள் இணைந்து தயாரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்த இரு நாடகங்கள் இலங்கை கலாசார பேரவை 1978இல் கொழும்பில் நடாத்திய தேசிய விழாவில் கிழக்குப் பிரதேசத்தில் சார்பில் மேடையேற்றப்பட்டுள் ளன. மேடையேற்றப்பட்ட மேற்கூறிய காதலே நீ வாழி. உன் கண்ணில் நீர் வழிந்தால் என்ற நாடகங்களில் எஸ். ஏ. கந்தசாமி, வீ. இராசேந்திரம், த. மயில் வாகனம், என். எம். இராசரத்தினம், எஸ். இராஜேந் திரப்பிரஸாத், கௌரி தேவநாயகம், விமலா சின்னப்பு ஆகியோர் நடித்துள்ளனர். எஸ். கே. பஞ்சரத்தினம், பி. றோச் அருளப்பு, ஏ. பிரான்சிஸ் சேவியர் (மூதூர்) ஜே. ஆர். அலக்ஸாண்டர் திருமதி. ம. சோமகேசன் போன்றோர் பின்னணி இசையமைப்பு காட்சி மேடை யமைப்பு என்பவற்றிற்குப் பொறுப்பாக இருந்துள்ளனர்

திருக்கோணமலைப் பிரதேச நாடக வளர்ச்சியில் முழுமூச்சாக முழுநேர பங்காளராக விளங்குபவர் கலைவேந்தன் த. அமரசிங்கம், கற்கும் காலத்திலேயே நாடகத்துறைக்குள் பிரவேசித்தவர். 'அமரன் ஆனந் தன்' நாடகக்குழு மூலம் கப்பலோட்டிய தமிழன் ஔவையார், வழிகாட்டி, மனமாற்றம், வேடன் கண் ணப்பா, நந்தி வர்மன் காதலி, போன்ற நாடகங்களில் மாணவராக இருந்தபோதே நடித்துள்ளார். உயர்கல் விக்காக தமிழகம் சென்ற இவர். அங்கும் நாடகக் குழுக்களோடு தன்னை இணைத்துக் கொண்டு அங்கும் பல நாடகங்களில் பங்கு கொண்டுள்ளார்.

திருக்கோணமலை திரும்பியதும், ஆங்காங்கே நகைச்சுவை நாடகங்களில் பங்கேற்று ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியவர். 1958இல் கலைவாணி நாடக மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதும் அதன் மூலம், கே. யோணின் 'பழிக்குப்பழி' தாசியின் 'காணிக்கை' போன்ற நாடகங்களில் நடித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்குக் காலம் தேவை நோக்கி நகைச்சுவை நாடகங்களை உடனுக்குடன் தயாரித்து, ஏலேலசிங்கம், தயாநிதி, ஜோண்பிள்ளை, நாபி போன்றவர்களோடு நடித்துப் பாராட்டப்பட்டவர் கலைவாணி நாடக மன்றத்தின் பத்தாண்டு நிறைவு 1968இல் கலையமுதம் என்ற பெயரில் மக்கெய்ஸர் திறந்த அரங்கில் நடைபெற்றபோது சமூக நாடகம் வரலாற்று நாடகம் ஆகிய இரண்டையும் ஒரே மேடையில் அரங்கேற்றி பத்திரிகைகளினால் பாராட்டுப் பெற்றவர்.

'அமரன் ஸ்கிறீன்' என்னும் புதிய மன்றத்தை உருவாக்கி இயக்கி, முக்கிய பாத்திரங்களில் நடித்தவர், 'குத்துவிளக்கு' (1970) 'சொர்ப்பன வாழ்வில்' (1979) ஆகிய இந்த இரு நாடகங்களையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் நாடகக் கலைஞர்களை பெரிதும் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. காலஞ்சென்ற கலைஞர் எஸ். இராயப்புவுக்கு காணிக்கையாகக் குத்துவிளக்கு மலர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அபிநயசிகாமணி சி. விஸ்வலிங்கம் (இன்று அவர் இல்லை) அவர்களின் முதல் நாடக அனுபவம் குத்துவிளக்கு மலரில் கட்டுரையாக அவரே தந்துள்ளார் அதே போன்று 'சொர்ப்பன வாழ்வில் சிறப்பு மலரில் சி, விஸ்வலிங்கம் அவர்களின் சிங்கள நாடகங்களும் நானும் என்ற தலைப்பில் அவராலேயே எழுதப்பட்ட கட்டுரையுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த இரு கட்டுரைகள் மூலம் கலைஞர் சி. விஸ்வலிங்கம் அவர்களைப் பற்றிப் பலவிடயங்களை அறியக்கூடியதாக இருக்கிறது. மேற்குறிப்பிட்ட 'சொர்ப்பன வாழ்வில்' நாடக மலர், காலஞ்சென்ற ஒப்பனைக் கலைஞர் எஸ். ஜோர்ஜ் என்பவருக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர் இயக்குனர் பி. எம். வேதநாயகம் இம் மாத ஆரம்பத்தில் எம்மை விட்டு மறைந்துள்ளார். இவரால் தயாரிக்கப்பட்ட 'தென்றலும் புயலும்' திரைப்படத்தில் மனதைக் கவரும் பாத்திரமொன்றில் நடித்ததன் மூலம் அனைத்து ரசிகர்களின் மனத்திலும் இடம் பிடித்துக் கொண்டவர் கலாவினோதன் அமர சிங்கம்.

வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும் அரங்கேற்றுவதிலும் நீண்டகால அனுபவம் கொண்ட வர். அவ்வப்போது பாடசாலை இளங்கலைஞர்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்குமுகமாக வில்லுப்பாட்டு நடிப்பு, ஒப்பனை என்பவற்றில் உதவுவதன் மூலம் பங்களிப்புச் செய்து கொண்டிருப்பவர். திருமலைக் கலைஞர்கள் விபரங்களைக் கொண்ட தொகுப்பு ஒன்றினை வெளிக்கொணருமுகமாக தகவல்கள் சேகரிப்பதில் முழுமூச்சா ஈடுபட்டுள்ளார்.

அடுத்து, நம் கவனத்தை ஈர்ப்பவர் கனக சடாச் சரம் ஆகும். 1962இல் திருவள்ளுவர் கழகத்தின் 'கொடுங்கோல் மன்னன்' நாடகத்தின் மூலம் நடிப்புத் துறைக்குள் பிரவேசித்த இவர், 1970இல் கே. எஸ். ராஜாவின் 'புதுவாத்தியார் பட்டபாடு' ரவியின் கொப்பரான கோட்டுக்கு இழுப்பேன்'. கே. கே. மதி, வதனனின் 'சாவே நீ வா' ஆகிய நாடகங்களிலும் நடித்த இவர் நாடங்களுக்கு இசையமைப்பதிலும் வாத்தியக் கருவிகளைக் கையாள்வதிலும் பெரும் பங்கு வகித்து வருகிறார்.

1976இல் சச்சிதானந்தத்தின் 'வாடகை வீடு' 1978இல் மூதூர் எஸ். எப். சேவியர் தயாரித்த 'ஸ்புட் னிக் சுருட்டு', கலைத்தாஸனின் 'வறுமைக் கோலங்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979இல் எஸ். எம். ராஜாவின் ''சத்தியமுத்திரை'', எஸ். சுதிரமலையின் 'புரோக்கர்' கண்ட புதுமைச் சைமன் கே. சற்குணவதியின் 'விதியின் விளைவு' யார் குற்றம்?, முத்தமிழ்க் கலா மன்றத்தின் 'விசித்திரக் குடும்பம்' எஸ். இராஜரட்னத்தின் 'அன்று சிந்திய ரத்தம்', முல்லைக் கிருஸ்ணாவின் 'பண்டார வன்னியன்', எஸ். சின்னப்புவின் 'மயாணகாண்டம்', பகவான் ஸ்ரீ சத்திய சமித்தி தயாரித்தளித்த நாடகங்களான 'மாருதி சேவித ராம சரண்', விதை விதைத்தவன், பாதுகை ராச்சியம், 'சரணடைந்தேன்' ஆகியவற்றிற்கு இசையமைத்துப் பாராட்டுப் பெற்றவர்.

இசையமைப்பதோடு, தொலைக்காட்சிக் கமராவைக் கையாள்வதிலும் அனுபவம் பெற்ற கனக சடாச்சரம் 1984இல் கலைஞர் கலைத்தாஸனின் 'அன்புக்கு ஒருவன்' தொலைக்காட்சி நாடகத்தை இயக்கியதோடு, 1986இல் எஸ். மயில்வாகனத்தில் 'நாலுக்கு இரண்டு நயம்' எஸ். இராஜரத்தினத்தின் 'சக்கடத்தார்', ஆகியவற்றிற்கு தொலைக்காட்சி கமரா ஆளுகை செய்துள்ளார். பாடசாலை நிகழ்ச்சிகளுக்கு இசை வழங்குவதிலும் பக்க வாத்திய உதவிகளைச் செய்வதிலும் தொடர்ந்து நமது பங்களிப்பினைச் செய்து வருகிறார்.

அடுத்து, கலைத்தாஸன் சின்னத்தம்பி திருக்கோணமலை நாடக வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார். செல்வநாயகபுரம் சரஸ்வதி நாடக மன்றத்தினை உருவாக்கி அதன் மூலம் பல்வேறு நாடகங்களை எழுதியும், தயாரித்தும் நடித்தும், பயிற்சி அளித்தும் மேடையேற்றியுள்ளார். 1975இல் ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றத்தின் மூலம் உழைப்பவனே மனிதன் சிம்மாசனம், வறுமைக் கோலங்கள், இந்த நாட்டு மாப்பிள்ளை போன்ற நாடகங்களோடு திருமலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது தொலைக்காட்சி நாடகமான "அன்புக்கு ஒருவன்" படத்தையும் தயாரித்துத் தந்த பெருமைக்குரியவர்.

## நாடக மன்றங்களின் பங்களிப்பு

1950இற்குப் பிறகு மன்ற அமைப்புக்களின் மூலம் நாடகங்கள் மேடையேற்றப்படத் தொடங்கின. இவற்றில் பெரும்பாலானவை தற்போதய, அப்போதய சினிமாத்தாக்கம் கொண்டவைகளாயும், தங்களின் சுய விளம்பரங்களை வெளிக்கொணர்ந்தவைகளாகவும் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன. அதேவேளையில் காத்திரமான படைப்புகளுடன் மிகச்சிறப்பான தரம் வாய்ந்த பரிசோதனை நாடகங்களும் மேடையேற்றப்பட்டுள்ளமையைச குறிப்பிட்டேயாக வேண்டும்.

1953இல் திருமலை காந்தி சேவா சங்கத்தின் மூலம் இ. சுப்பிரமணியம், நா. கணபதிப்பிள்ளை, அ. சச்சிதானந்தம், து. குலவீரசிங்கம், த. அமரசிங்கம் போன்றோரும். திருக்கோணமலை கலைவாணி நாடக சபா மூலம் கே. சுவக்கீன்பிள்ளை, கே. எஸ். துரைசிங்கம், எஸ். அந்தோனிப்பிள்ளை 1958இல் திருக்கோணமலை கலைவாணி நாடக மன்றத்தின் மூலம் கருணை யோஸப் கே யோன், ஏ. யோன்பிள்ளை, த. அமரசிங்கம், தாபி சுப்பிரமணியம் 1970இல் யாழ் கலை அரங்கத்தின் மூலம் பி. றோச் அருளப்பு, கே. கே மதிவதனன் 1975இல் சரஸ்வதி நாடக மன்றத்தின் மூலம் கலைத்தாஸன் எஸ். சின்னத்தம்பி, எஸ். இராஜேந்திர பிரஸாத், நிலாவெளி ஜெயா மன்றத்தின் மூலம் எஸ். இராஜரட்ணம் திருக்கடலூர் முற்போக்கு கலா மன்றத்தின் மூலம் செ. பத்திநாதன் கே. எம். ஹனிபா எங்கள் நாடக மன்றத்தின் மூலம் தம்பி தில்லை முகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா. சு. மணியம், இலக்ஷ்மணப்பெருமாள், திரவியமலர் ஆகியோர் திருக்கோணமலை நாடக ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். தொடர்ந்தும் காலத்திற்குக்காலம் தங்களின் பங்களிப்பை அளித்து வருகிறார்கள்

மேற்குறிப்பிட்ட மன்றங்களைவிட காலத்திற்குக் காலம் உருவாகி ஒன்று இரண்டு நாடகங்களோடு இயங்காமற்போன மன்றங்களும் கலைஞர்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை வருமாறு.

திருக்கடலூர் கலாவதி நாடகசபா, முத்தமிழ் நாடகசபா. திருக்கோணமலை நாடகசபா, உதயசூரியன் நாடக மன்றம், செல்வநாயகபுரம் காசிநாதன் கலா மன்றம், ரிங்கோ கலா மன்றம், திருமலைக் கலைக்குழு, வியோ கலைக்குழு, வெண்ணிலா நாடக மன்றம், வேம்படி வைரமுத்துக்குழு, புதுமலர்ச்சி நாடக மன்றம், திருமலைக் கலா மன்றம், கலையரசி நாடக மன்றம், வானவில் புரடக்ஸன்ஸ், முன்னம்போடிவட்டை வாணி கலா மன்றம், மூதூர்க் கலா மன்றம், பட்டித்திடல் கலைமகள் நாடக மன்றம், மதியரசி மன்றம், நாவலர் நாடக மன்றம், நாடோடி நாடக மன்றம் என்பவை அவற்றில் சிலவாகும்.

## மன்றங்களும் அவற்றின் படைப்புகளும்

***1950 - 1955***

சி. விஸ்வலிங்கத்தின் "கொள்ளைக்காரன்" (மதிவளர் நாடகமன்றம் - 07-04-51) திருமலை காந்தி சேவா சங்கத்தின் "இளைஞன்" இதில் இ. சுப்பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியம் (தற்போதய வங்கி முகாமையாளர்) நா. கணபதிப்பிள்ளை (புகைப்படக்கலைஞர்) காஞ்சென்ற அ. சச்சிதானந்தம், து. குலவீரசிங்கம் (ஆளுனர் அலுவலக உதவிச் செயலாளர்) த. அமரசிங்கம் போன்றோர் நடித்துள்ளனர். இதனை முன்னெடுத்துச் சென்றவர் தியாகி இராஜகோபால். 'சிற்பியின் சிதைந்த உள்ளம்' ஜே. அன்று என்பவரின் கதை வசனத்தில் சி. விஸ்வலிங்கத்தின் பயிற்சியில் சென் அன்ரனிஸ் சிங்கள வித்தியாலயத்தில் திருக்கோணமலை கலாவதி நாடக சபாவினால் 1952இல் மேடையேற்றப்பட்டது. 'கொள்ளைக்காரன்' விஸ்வலிங்கம், கே. எஸ். துரைசிங்கம், ஆகியோரின் தயாரிப்பில் முத்தமிழ் நா. சபையால் மேடையேற்றப்பட்டது "தவறான பாதை" சி. விஸ்வலிங்கம் திருமலை கணேசபாவிய நா. சபா, 28-05-53 இல் திருவள்ளுவர் கழக திருக்குறள் மகாநாட்டில் "வள்ளுவம்" இவ்விழாவில் பண்டிதர் க. பொ. இரத்தினம் பி. ரி. இராஜன் எம். எல். ஏ. சுவாமி சச்சிதானந்தயோகி, பச்சையப்பன் கல்லூரி அ. ச. ஞானசம்பந்தர் எம். ஏ., ம. பொ. சிவஞானம், பண்டிதமணி ஏ. பெரியதம்பி ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

*1956 - 19960*

மக்கள் நாடகசபாவின் "யார் குற்றம்", சென்ற் அன்ரனிஸ் சிங்கள வித்தியாலயத்தில் 08-11-57 இல் மேடையேறிய இந்நாடகம் ஏ. சி. கனகசிங்கம் (தற்போதைய வழக்கறிஞர் கே. பாலசிங்கம் அவர்களின் தந்தையார்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு எம். எஸ். கமலாம்பாள், எம் எஸ் இராஜாம்பாள், ரி. பி. ராமலட்சுமி, ஆகியோரும் நடித்துள்ளனர். பின்னணி திருமலை சீனு கே. முத்துலிங்கம். கலைவாணி நாடக சபா 10 - 11 - 56 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்ரன் தியேட்டரில் (இது பின்னர் ராஜீ தியேட்டர் இன்று 'அன்ரு' தியேட்டர்) கே. எஸ். துரைசிங்கத்தின் 'சமாதி', பின்னணி 'திருமலை சீனு'

22-11-68 இல் திருக்கோணமலை கலைவாணி நாடக மன்றத்தின் அங்குரார்ப்பண விழாவில் பழிக்குப்பழி (வரலாற்று நாடகம்) இதில் கருணை யோசப், த. அமரசிங்கம், ஏ. யோண்பிள்ளை, கே. ஸ்ரனிஸ்லோஸ், தாபி ஆகியோருடன் வானொலிக் கலைஞர்களான லடிஸ் வீரமணி, ரி. வி. பிச்சையப்பா ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

**1961 - 1965**

(09-06-62) அபயபுர நாட்டிய கலா சங்கத்தின் வெளியீடு அசரணய சிங்கள தமிழ்க் கலைஞர்கள் நடித்த நாடகம், மகேதுவ சி. விஸ்வலிங்கம் பயிற்சி. 11. 11. 62) திருமலை சின்னையா ஜேசுதாஸனின் தயாரிப்பில் கட்டுகஸ்தோட்டை சென் அன்ரனிஸ் கல்லூரியில் திருந்திய வேந்தன். இதில் பி. பாலசுப்பிரமணியம், சி. ஜேசுதாஸன், நடிப்பு, பாடல்கள் தோப்பூர் பேதுறுப்பிள்ளை, ஒப்பனை பி. எம். ஜோர்ஜ், ஆ. அசனாரின் பழங்கவிஞர் கைலாசம்.

**1966 - 1970**

எஸ். கபிரியேலின் 'இரத்தச் சிம்மாசனம்' (06-05-68), திருக்கோணமலை கலைவாணி நாடக மன்றத்தின் பத்தாண்டு நிறைவு விழாவில் கலையமுதம் என்ற பெயரில் மனமாற்றம் (வரலாற்று நாடகம்) நம்பர் 12, பெயர் சூட்டும் சமூக நாடகம் என்பவற்றோடு இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற நாடகத்திற்குப் பெயர் சூட்டியதனால் பரிசா கப் பெற்றுக் கொண்ட ''தங்கப்பதக்கத்தை இன்று நினைவு பொக்கிசமாக வைத்திருக்கிறார் செல்வி கே. பென்னம்பலம் அதிபர், மேற்குறிப்பிட்ட நாடகங் களில் ஏ. யோண்பிள்ளை நோபட் எட்வேட், என். அரவிந்தராசா, எஸ். இராஜாதிராஜன், எஸ். இமா னுவேல், என். வி. திருச்செல்வம், செல்வி சி. கிறேஸ், எ. ஏலேலசிங்கம், ஐ. பியதாஸ, எஸ். மயில்வாகனம் ம. குசைநாயகம், பி. ஜே. கலைமாறன் த. அமரசிங்கம் திருமதி. எலிசபேத் லாசறஸ், எஸ். யோசப், தாபி, ஆகியோர் நடித்துள்ளனர். நாடகத்தின் பாடல்கள் சி. யோசப், பின்னணி க. சண்முகலிங்கம், ட. சுந்தரேஸ்வர ஐயர் (வீணை) மீனா யேசுதாஸன் (புல்லாங்குழல்) த. சுந்தரலிங்கம்.

உதயசூரியன் நாடக மன்றத்தின் 'இருளும் ஒளியும்'' காசிநாதன் கலா மன்றத்தின் 'ஆடகசௌந் தரி' ரிங்கோ கலா மன்றத்தின் 'வாழ்வு எங்கே?' மதிவளர் நா. ம சி. விஸ்வலிங்கத்தின் 'தாயின் குழந் தை', அடங்காப்பிடாரி, நாமகள் நாடக மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில் 'ஒளிமலர்', அடங்கிய டடாரி கே. எஸ். துரைசிங்கத்தின் கதை வசனத்தில ட். றோச் அருளப்பு நடித்துள்ளார்.

**1971-1975**

திருமறைக் கலா மன்றம் ஜே. எஸ். மொகமட்டின் 'ரூம் நம்பர் செவன்' மதிவளர் நா. ம. சி. விஸ்வலிங் கத்தின் 'மாமி விஜயம்', 'மருமகள் விஜயம்' (சாம்பல் தீவில்) அன்புவழிபுரம் புதுமலர்ச்சி மன்றத்தின் 'சோக்கிறற்றீஸ்' எம். ஜீ. ஆர். மன்றத்தின் 'நெஞ்சில் ஒரு நினைவு' நாமகள் நா. மன்றத்தின் 'மாலா', தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைமுகிலனின் 'மாமிக்கு மயக்கம்' த. அமரசிங்கத்தின் 'நான் கேட்ட பாடல்' மக்கள் நா. மன்றம் கே. எஸ். துரைசிங்கத்தின் 'சங்கிலியன்' இதில் தம்பி தில்லை முகிலன், சஞ்சுவான் ஆகியோர் நடித்துள்ளனர். முன்னோடிகள் நல்லை அமிழ்தனின் 'அபிப்பிராயங்கள்' சின்னத்துரையின் 'சீனத்து பொம்மைகள்', யோண் செல்வராஜாவின் 'கந்தையா மாஸ்ரர்'

16-04-73 இல் யேசு சபைச் சுவாமியார் யோசப் மேரி அவர்களின் நாட்டிய நாடகம் 'நீ எதிர்கொண்டதேன்?' பிரமாண்டமான தயாரிப்பு பால் நிலவு பொழிகின்ற கடற்கரையில் அமைக்கப்பட்ட பெரிய மேடையில் மேடையேற்றப்பட்டு பாராட்டைப் பெற்றது. நாற்பதிற்கும் மேற்பட்ட பெண்கள் நடித்த இந்த நாட்டிய நாடகத்தில் சாத்தானாக நடித்த ஒரேயொரு ஆண் த. அமரசிங்கம் ஆகும்.

**1976-1980**

மதிவளர் நா, ம. சி. விஸ்வலிங்கத்தின் 'ஏகலைவன்', அட கடவுளே, மகாவலி, கோயில் சொத்து, மறுபடியும் மாமியார் வீடு, அங்கிருந்து வந்தவள், நாடா சுடுகாடா? திருமலைக் கலா மன்றத்தின் 'ஸ்டுடியோவில் கிரேஸி போய்ஸ்' கலையரசி நா. மன்றத்தின் 'பாசத்தின் கனிகள்'

திருக்கோணமலை கலை வட்டத்தின் 'சித்திரைக் கோலத்தில்' 'காதலே நீ வாழி' (கவிதை நாடகம்) கனக மகேந்திரனின் 'காவியம்', சிவயோக சமாஜத்தின் 'யார் இவர்?' முத்தமிழ்க் கலா மன்றத்தின் 'யார் குற்றவாளி?' சரஸ்வதி நா. ம. கலைத்தாஸன் சின்னத்தம்பியின் உழைப்பவனே மனிதன், நிலாவெளி ஜெயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்ற எஸ். இராஜரட்ணத்தின் 'சத்திய முத்திரை' திருக்கடலூர் முத்தமிழ்க்கலா மன்ற இராஜேந்திரப் பிரஸாத்தின் 'அமளிகள்' புரோக்கர் கண்ட புதுமைச் சைமன்', வானவில் புரடக்ஸன்ஸ் தம்பி தில்லைமுகிலன் மூ. வே. யோகேஸ்வரன் ஆகியோரின் 'புதிய தலைமுறைகள்'.

முத்தமிழ்க் கலா மன்றத்தின் 'அன்று சிந்திய இரத்தம்' (இதன் பாடல்கள் சின்னையா ஜோசப்) காசிய மன்னன், கணேச பாலிய நாடக சபாவின் 'தவறான பாதை, தங்கவேல் குழுவினரின் 'பண்டார வன்னியன்' சிவா குழுவினரின் 'கொழும்புக்கு போன குப்பை' கே. எஸ். துரைசிங்கத்தின் 'மானம் தந்த பரிசு', 'சிலைகள்'

09-09-78 இல் மூதூரில் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெற்ற நாடகங்கள்:- பட்டித்திடல் கலைமகள் நா. ம. 'உரிமையின் விலை', மதியரசி மன்றம் 'எனக்கு என்றொரு வாழ்வில்' கத்தோலிக்க இளைஞர் மன்றத்தின் 'அவன் துரோகியல்ல', வின்சன் டீ போல் சபையினரின் 'வாசு நீ பைத்தியமா?' எங்கள் நாடக மன்றத்தின் 'பலவீனங்களின் பலி' திருமலை கலை வட்டத்தின் காதலே நீ வாழி, முன்னம் போடிவட்டை வாணி கலா மன்றத்தின் 'ரமணி' சம்பூர் நா. மன்றத்தின் 'ஐயாயிரம் ரூபா', மூதூர் கலா மன்றத்தின் 'கர்ணன் போர்' மதிவளர் நா. மன்றத்தின் 'பலிபீடம்' சேனையூர் நா. மன்றத்தின் 'உரிமைக்குரல்' மூதூர் இளங் கிறிஸ்தவ மகளிர் கலை வட்டத்தின் 'விதை விதைத்தவன்', திருமலை இளைஞர் இணைப்புக் குழுவின் 'மரணத்தின் பரிசு'

12-01-80 இல் கலைத்தாஸன் சின்னத்தம்பியின் சரஸ்வதி நா. மன்ற பொங்கல் விழாவில் 'சிம்மாசனம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரொளி நா. மன்றத்தின் 'இறுதி மூச்சு' (சரித்திர நாடகம்) மதிவளர் நா. ம. சி. விஸ்வலிங்கத்தின் 'அங்கிருந்து வந்தவன்', எங்கள் நாடக மன்றத்தின் 'கேள்வி' (கவிதை நாடகம்) முத்தமிழ்க் கலா மன்றம் தாபியின் 'காணிக்கை', நா. மன்றத்தின் தங்கம்மா ஆகியன அரங்கேறின.

மதிவளர் நா. ம. சி. விஸ்வலிங்கத்தின் 'நாடா சுடுகாடா?', சி. தங்கவடிவேலின் 'பண்டார வன்னியன்' நிலாவெளி இராஜரட்ணத்தின் 'சத்திய முத்திரை' (நாட்டிய நாடகம்) முத்தமிழ்க் கலா மன்றத்தின் 'தங்கையா தாரமா?' வானவில் புரடக்ஸன்ஸாரின் 'புதிய தலைமுறைகள்', சரஸ்வதி நா. மன்றம் சின்னத் தம்பியின் 'சிம்மாசனம்', 'வறுமைக் கோலங்கள்' கதி ரொளி நா. மன்றத்தின் 'உறவுகள் பிரிவதில்லை' இந் துக்கல்லூரி ரவீந்திரா நா. மன்றத்தின் 'கம்பனும் மன்னனும்' (இசை நாடகம்) தா. சீ. வில்வராஜனின் 'புது வாத்தியார் பட்ட பாடு' நாவலர் நாடக மன் றத்தின் 'சங்கிலியன்'.

*1981-1990*

மதிவளர் நா. ம. சி. விஸ்வலிங்கத்தின் 'இறை சக்தி' செல்வநாயகபுரம் இளைஞர் சேவை மன்றத்தின் 'ஊரே சிரிக்குது' கலைவாணி மன்றத்தின் (தாபியின்) 'சத்தியவான் சாவித்திரி', கலைத்தாஸன் சின்னத்தம் பியின் 'இந்த நாட்டுப் பிள்ளைகள்' க. அருள் சுப்பிர மணியத்தின் 'நான் நீதியின் பக்கம்' நாவல் வெளியீட்டு விழாவில், திருக்கோணமலை கலைவாணி நாடக மன்றம் த. அமரசிங்கத்தின் 'ஊர்த்தவளைகள்', விபுலானந்த நூற்றாண்டு விழாவில் - த. அமரசிங்கத்தின் 'சொன்ன தைச் செய்வோன்', மயில்வாகனம் குண்டு ரவியின் 'ரயில் பிரயாணம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழையடி வாழை

நாம் முன்னர் விபரித்த கலைஞர் சிலரின் வழித் தோன்றல்கள், தொடர்ந்தும் பல்வேறு விதத்தில் கலைஞர்களாக மிளிர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

மீசைக்கார அந்தோணி என்று அழைக்கப்பட்ட எம். சி. அந்தோனிப்பிள்ளையின் மகன் ஏ. யோண் பிள்ளை எங்களோடு சமகாலத்தில் கலைவாணி நாடக மன்றத்தின் மூலம் அண்மைக்காலம் வரை கலைப்பயில் ஈடுபட்டு பல மேடை நாடகங்களிலும், வானொலி நாடகங்களிலும் நடித்துள்ள இவர், தற்போது கலைப் பணியிலிருந்து விலகி தன்னை இறை பணிக்குள் இணைத்துள்ளார்.

மக்கள் நாடக சபாவின் பாடகரான திருமலை முத்துலிங்கத்தின் மகன் 1969 இல் திருமலையில் நடாத்தப்பட்ட அகில இலங்கைத் தமிழ் மொழித்திறன் போட்டியில் 'பாஒதல' நிகழ்ச்சியில் தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டார். (அப்போது அவர் புனித பிரான்சிஸ் சவேரியார் வித்தியாலய மாணவர்) தங்கப் பதக்கம் தந்த உற்சாகமும் ஊக்கமும் இன்று, அவரை புகழ் பெற்ற ரூபவாகினிப் பாடகராக உயர்த்தியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். அவர் தான் பிரபல பாடகர் 'ஜெயபாரதிதாஸன்' ஆகும்.

அண்ணாவி சின்னையாவின் இரு புதல்வர்களான ஜேசுதாஸன், யோசப் ஆகியோர் இன்றும் நாடகத் துறைக்குத் தங்களின் பங்களிப்பினைச் செலுத்தி வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர் தம்பிஐயா தம்பிமுத்துவின் புதல்வர் அமரசிங்கம் தொடர்ந்து கலையுலகில் தனது முத்திரையைப் பதித்த வண்ணம் இயங்குகிறார்.

கலைஞர் கே. சுவக்கீம்பிள்ளையின் மக்கள் கே. எஸ். துரைசிங்கம், பல நாடகங்களைத் தயாரித்தளித்தவர், கே. எஸ். பாலசிங்கம், 'திருமலை இசைக் குழுவில் பாடகராக இயங்கியவர். வாத்தியக் கருவிகளைக் கையாள்வதில் அனுபவம் உள்ளவர்'

## தொலைக்காட்சி நாடகம்

தரமான தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரிக்கவென பல கலைஞர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கால்கோளாக கலைத்தாஸன் சின்னத்தம்பி 'அன்புக்கு ஒருவன்' என்ற பெயரில் 1984 இல் உள்ளூர்க் கலைஞர்களைக் கொண்டு தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்து பாராட்டப்பட்டவர்.

1987இல் நோபட் ஒக்கஸ் சுவாமியார் ''புது வாழ்வு'' என்ற பெயரில் கிறீஸ்துவின் இறுதிக்கால நிகழ்வுகளை மையமாக வைத்து நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர் பெரியவர்களைக் கொண்டு இயற்கை வெளிப்புறக் காட்சிகளிலும் பிரமாண்டமான மேடை அமைப்புகளிலும் தொலைக்காட்சி நாடகத்தை தயாரித்து வெளியிட்டார்.

தொடர்ந்து மயில்வாகனத்தின் ''நாலுக்கு இரண்டு நயம்'' இராஜரத்தினத்தின் 'சக்கடத்தார்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. அருள் சுப்பிரமணியத்தின் வெளியீடு ஒன்றுமாக தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## நாடக இலக்கியம்

நாடகங்கள் மேடையேற்றப்பட்ட அளவிற்கு, நாடக இலக்கிய முயற்சிகள் வெளிவராதது கவலைக்குரியதாகும். விரல் விட்டு எண்ணுமளவிற்கே நாடக இலக்கியங்கள் உள்ளது.

சட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் வே. அகிலேசபிள்ளையின் (1887) 'கண்டியரசன் நாடகம்' எழுத்துப் பிரதியாகவே இன்றும் இருக்கிறது; இதே சம காலப்பகுதியில் இன்னாசிமுத்து என்பவரால் எழுதப்பட்ட 'ஜேசோன் பாலந்தை' நாடகநூல், 1925இல் ச. வேலாயுதபிள்ளை என்பவரால் எழுதப்பட்ட 'இசபெல்லா அல்லது ஈஸ்வரி' என்ற கவிதை நாடக நூல், 1969 இல் கலைவாணி நாடக மன்றத்தின் பத்தாண்டு நிறைவு மலர் 'கலையமுதம்' 1970இல் அமரன் ஸ்கிறினின் 'குத்துவிளக்கு மலர்', 1979இல் அமரன் ஸ்கிறீனின் 'சொர்ப்பன வாழ்வில் மலர்' குங்குமம் மாநில மஞ்சரியில் வெளிவந்த தாபியின் 'மகாஜோதி' தர்ம சிவராமு எழுதி தமிழகத்தில் வெளிவந்த 'நட்சத்திர வாசிகள்' நாடக நூல், 1980இல் வெளிவந்த தாபியின் 'கோயிலும் சுனையும்' நாடகத்தொகுதி ஆகிய இவையே நம் கைக்குக் கிடைக்கும் நாடக இலக்கியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட அவ்வப்போது நாளிதழ்களில் த. அமரசிங்கம், 'திருமலை நவம்' கா. இரத்தினலிங்கம் போன்றோர் எழுதும் கட்டுரைகள் திருமலைப் பிரதேச நாடக விபரங்களைத் தருகின்றன. ஆயினும் இவற்றை மட்டும் நாடக இலக்கியங்களாகக் கொள்ள முடியாதிருக்கிறது. எனவே, திருக்கோணமலைப் பிரதேசத்தில் நாடக இலக்கியங்கள் வெளிவர கவிஞர்களினதும் வெளியீட்டாளர்களினதும் பங்களிப்பு மிகமிக அவசியமாகின்றது.

எல்லா வகையிலும் தரம் வாய்ந்த கலைஞர்கள் திருக்கோணமலைப் பிரதேசத்தில் இருக்கிறார்கள். ஆயினும், இவர்களின் திறமைகளை வெளிக்கொணர, வெளியாருக்கு அறிமுகஞ் செய்ய ஏனோ பிரசாரக் களங்கள் பின்னிற்கிறது. பல்வேறு இருட்டடிப்புகளும் நடைபெறாமல் இல்லை. செய்யப்படும் இருட்டடிப்புகளையும் மீறிக் கொண்டு தங்களின் திறமைகளினால் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு வெளிச்சத்திற்கு வந்தவர்களும் நம்மிடையே இல்லாமலில்லை.

அபிநயசிகாமணி சி. விஸ்வலிங்கம், 'தென்றலும் புயலும்' சினிமா புகழ் கலைஞர் கலைவேந்தன் த. அமரசிங்கம், சினிமாத் தயாரிப்பாளர் பி. எம். வேதநாயகம், ரூபவாகினி புகழ் கலைஞர் பி. றோச் அருளப்பு, எஸ். மயில்வாகனம், வானொலி புகழ் கே. கே. மதிவதனன், நிர்மலா சினிமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் இசையமைப்பாளர் த.பத்மநாதன், மெல்லிசைக் கலைஞர் எம்பி.பரமேஸ், கோணேஸ், எஸ்.கே பஞ்ச ரட்னம், ஜே.ஆர்.அலக்ஸாண்டர், ஜெயபாரதிதாஸன், ஜே.இம்மானுவேல் போன்றோரைச் சுட்டிக் காட்டலாம்.

## முடிவாக

அண்மைக்கால விரும்பத்தகாத நிகழ்வுகளால், திருக்கோணமலைப் பிரதேச நாடக முயற்சிகள் சோர்ந்த நிலையில் காணப்படுகிறது. குறிப்பாக மரபு முறைகளைக் கட்டிக் காத்து வந்த, சுற்றியுள்ள கிராமப் புறங்கள் முற்றும் முழுவதாக முடங்கிக் கிடக்கின்றன. இந்த நிலை நாடகக் கலைக்கு மாத்திரமன்று. தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகள் அத்தனைக்கும் ஆரோக்கியமானதல்ல.

கறுத்த மேகங்களுக்கிடையே சில மெல்லிய வெள்ளிக் கீற்றுக்கள் தென்படுவது போல நம்பிக்கை தரும் சில நிகழ்வுகள் மனதிற்கு தெம்பை ஊட்டுகின்றன.

வடக்குக் கிழக்கு புனர்வாழ்வு அமைச்சின் பிரதிச் செயலாளர் க, பற்குணம் அவர்களது முயற்சியால் அண்மையில் திருக்கோணமலையில் 'நாடகப் பட்டறை' ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இயற்கை ஆற்றல்களைக்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இளங்கலைஞர்கள் இனங்காணப்பட்டு, இந்தப் பட்டறைகள் மூலம் தங்கள்ஆற்றல்களை முறைப் படுத்தி, வெளிப்படுத்த வழியும் முறையும் கிடைக்கச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர் தம் பணியைத் தொடர்வார் என்பதில் சந்தேகமில்லை.

அகில இலங்கை ரீதியாக வருடா வருடம் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்டு வரும் தமிழ்மொழித் தினப் போட்டிகளில், கடந்த நான்கு ஐந்து வருடங்களாக தொடர்ச்சியாக சமூக நாடகம், இலக்கிய நாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து என்பனவற்றில் இப்பிரதேச மாணவ மணிகள் தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்துக் கொண்டு வருவது பிரதேச நாடக அபிமானிகளின் மனதைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

இன்றைய இந்தக் கலைஞர்களால், திருக்கோணமலைப் பிரதேசத்திற்கு, அதன் நாடக வளர்ச்சிக்கு நல்லதொரு எதிர்காலம் உருவாக்கப்படும் என்ற மகிழ்ச்சியான நல்ல சிந்தனையோடு காத்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிருமிளின் 'எழுத்து' கால விமர்சனக் கட்டுரைகள்

## தொகுப்பு: காலப்ரதீப் சுப்பிரமணியன்

## எழுத்துவுக்கு முன்

பிருமிள் உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண் டிருந்த போது, 'யாழ்' என்ற கையெழுத்து மாத இதழில் கதை, கவிதை, கட்டுரை, சித்திரங்கள் என்று ஒவ்வொரு இதழிலும் ஏராளமாக எழுதியிருக்கிறார். இவையும் விதவிதமான பெயர்களுடன்தான் வெளியா கியுள்ளன. வீணை வேந்தன் என்பவரை ஆசிரியராகக் கொண்ட இந்த இதழ் இல. 09 வீச்சுக்காரத்தெரு, திருகோணமலை என்ற முகவரியிலிருந்து கொண்டுவரப் பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு முன் த. அமரசிங்கம் என்ற வீணை வேந்தன், தமிழ்நாட்டுக்கு வந்தபோது கைவசம் இருந்த சில இதழ்களைக் கொண்டு வந்திருந் தார். அவற்றை நான் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது

அவற்றில் 'நாஸ்திகம் என்றால் என்ன?' என்ற கட்டுரையும் 'உணர்ச்சி என்னும் கோவில்' என்ற கட்டுரையும் கிடைத்தன. முதல் கட்டுரை, இளமையி லேயே பிருமிள் பெற்றிருந்த விமர்சன முதிர்ச்சிக்கு இன்றும் உதாரணமாக விளங்குகிறது.

ஆஸ்திகம் என்பது ஆறு போன்று நன்மையளிப் பது; நாஸ்திகம் காட்டாறு போன்று தீமையும் விளை விப்பது என்று கூறும். அக் கட்டுரை இந்து மதத்தில் நாஸ்திகத்தின் பங்கு பற்றியும் விவேகாந்தர் போன் றவர் அதை அணுகிய முறை பற்றியும் விளக்கி விட்டு பின்வருமாறு முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காட்டாறு நாஸ்திகம், வனவிலங்குக் காட்டை விட்டு மனித சமூகம் வழியாகப் பாயும் போது ஆஸ்திகமாகிறது. நாஸ்திகத்திலிருந்து தான் ஆஸ்திகம் வர வேண்டும் என்பது இதன் விளக்கம். முதலில் தீமைகளைப் பற்றிப் பேசி விளங்கிக்கொண்ட பிறகு நன்மைகளைப் பற்றிய எண்ணம் வரும். முழுவேதாந்தி நாஸ்திகத்தைப் பழிப்பதில்லை. அதை வரவேற்கிறான். ஆனால் அவன் நாஸ்திகத்தை மேற்கொள்ளத் தயாராயில்லை. தீமைகள் யாவை என்று அறிவது தவறல்ல, ஆனால் தீமைகளைப் பற்றி எண்ணி எண்ணித் தீமையை வளர்த்துக்கொள்ளல் தவறு. ஆஸ்திகம் எப்போதும் நன்மைகளை உய்விக்கிறது.

(நாஸ்திகம் என்றால் என்ன?. யாழ். பங்குனி 15.1957)

இக்கட்டுரை வெளிவந்த சமயம், பள்ளிக்கு வருகை தந்திருந்த குன்றக்குடி அடிகளார் இதைப் படித்துவிட்டு 'இதை எழுதிய மாணவனைப் பார்க்க வேண்டும்' என்று விசாரித்திருக்கிறார். ஆனால் பிருமிள் அவரைச் சந்திப்பதைப் பற்றி அக்கறை கொள்ளாமல் தவிர்த்திருக்கிறார். மற்றுமொரு கட்டுரை, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தலே சுதந்திரம். உணர்ச்சியின் வசப்படுகிறாய் என்றால் நீ சுதந்திரத்தை இழக்கிறாய். என்று சொல்கிறது.

(உணர்ச்சி எனும் கோவில், யாழ், 15-7/8 1957)

இவ்விரு கட்டுரைகளும் 'லக்ஷ்மி ஜோதி' என்ற பெயரில் வெளி வந்துள்ளன.

நன்றி

தமிழின் நவீனத்துவம்

லயம் வெளியீடு

நகலூர், அந்தியூர் 638501

தமிழ்நாடு Oct-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேகை ஓவிய வரிசை (24)

ஈழத்து இலக்கியச் சோலை
திருக்கோணமலை



# பெ. பொ. சிவசேகரன்

கழகப்புலவர், திருவள்ளுவர் கழகம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org